# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 09 வியாழக்கிழமை (23-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:58


23 JAN 2003





அளவெட்டி அதிரம்புலம் தோட்டப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கிய ஆளில்லாத வேவுவிமானத்தின் சிதைவுகளை படையினர் மீட்டு வருவதைப் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்) (படங்கள் : பிரேம்)


# ஆளில்லா வேவு விமானம் அளவெட்டியில் வீழ்ந்தது!

- அளவெட்டியிலிருந்து அலுவலகச் செய்தியாளர்கள் -

அளவெட்டி,ஜனவரி23

**இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லா வேவுவிமானம் ஒன்று (Unmanned Aerial Vehicle) நேற்று நண்பகல் அளவெட்டி அதிரம்புலம் பகுதியில் தோட்டக் காணியில் வீழ்ந்து நொறுங்கி அழிந்தது.**

இந்த ரகத்தில் தன்வசம் இருந்த கடைசி விமானத்தையும் இலங்கை விமானப்படை இழந்துள்ளது.



சாதாரண பரீட்சார்த்தப் பறப்பில் ஈடுபட்டிருந்த சமயம் விமானக் கட்டுப்பாட்டு அறையின் கட்டுப்பாட்டை இழந்து அது வீழ்ந்து நொருங்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நண்பகல் 11.05 மணிக்கு பலாலி விமானப் படைத் தளத்திலிருந்து புறப்பட்ட இந்த விமானம், சற்று நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த விமானத்தின் கட்டுப்பாடு இழக்கப்பட்ட தகவல் பலாலி விமானத் தளப்பகுதியில் பரவியதையடுத்து அங்கு பதற்றம் தொற்றிக் கொண்டது.

பலாலி விமான நிலையத்தில் இறங்குவதற்காக அதனை நோக்கி வந்து கொண்டிருந்த அனைத்து விமானங்களும் பலாலி விமான நிலையத்தை விட்டு விலகித் தூரத்தைப் பேணுமாறு அறிவுறுத்தப்பட்டன.

விமான நிலையத்தில் தரித்துநின்ற விமானங்கள், பிரதான ஓடு பாதையிலிருந்து தூரவாக நகர்த்தப்பட்டன.

அதேசமயம், கட்டுப்பாட்டை இழந்த விமானத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தீவிர முயற்சிகளை விமான நிலைய தொழில்நுட்ப அதிகாரிகள் அவசர அவசரமாக மேற்கொண்டனர்.

தொடர்பு கிடைத்து விமானத்தைக் கட்டுப்படுத்த முயன்றதால் அதை உடனடியாக பலாலி ஓடுபாதையில் கொண்டுவந்து இறக்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. விமான ஓடுபாதைக்கு நெருக்கமான விமானப்படையின் தீயணைப்பு பிரிவு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும், நண்பகல் 12.10 மணியளவில் பலாலிக்கு சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் - அளவெட்டியில் உள்ள அதிரம்புலம் பகுதியில் - வெங்காயத் தோட்டம் ஒன்றின் நடுவே விமானம் வீழ்ந்து நொறுங்கியது.

விபத்து நடந்த இடத்தில் உயிரிழப்போ, உடைமைகளுக்குச் சேதமோ ஏற்படவில்லை. பெருமளவு பரப்பில் வெங்காயப் பயிர் அழிந்து நாசமாகியது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி அதிகாரிகள் கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஜன.23

உலக வங்கியின் அதிகாரிகளுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று கிளிநொச்சியில் நடந்தது.

உலகவங்கியின் பிரதிநிதிகள் குழுவில் நால்வர் கலந்துகொண்டனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சார்பாக அதன் நிறைவேற்றுப் பொறுப்பாளர் றெஜி, லோறன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் கல்வி அபி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் பிரதிநிதிகள் வன்னியில்

கிளிநொச்சி,ஜன.23

சுவிஸ் நாட்டின் விசேட தூதுக்குழு ஒன்று நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள மற்றும் அதற்கு சுவிஸ் நாட்டின் உதவிகள் போன்றன குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வெடிபொருள்களை அகற்றுவது தொடர்பாகவும் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஐ-4)

## புதிய அமைச்சர்கள் நாளை பதவியேற்பர்

கொழும்பு,ஜன.23

ஏழு புதிய அமைச்சர்களும் ஒரு பிரதியமைச்சரும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பதவியேற்பார்கள்.

பதவியேற்பு நிகழ்ச்சி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் நடைபெறும். (ஐ-4)

## அடுத்த கட்டப் பேச்சு கொப்பன்ஹேகனில்?

கொழும்பு,ஜன.23

அடுத்த ஐந்தாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் டென்மார்க்கின் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடைபெறலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

பேச்சு நிகழ்ச்சி நிரலின்படி ஐந்தாவது சுற்றுப்பேச்சுக்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவின் தலைவரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலை கருதி - அவர் நீண்ட தூரம் பயணம் செய்வதைத் தவிர்ப்பதற்காக - டென்மார்க் தலைநகரில் பேச்சுக்களை நடத்த விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர் என்றும் - இதுபற்றி இரு தரப்புகளும் இணக்கம் காண வேண்டி இருப்பதாகவும் தெரியவருகிறது.

அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலை கருதி பேச்சு நடக்கும் தினங்களும் இருநாள்களாக குறைக்கப்படலாம என்று கூறப்படுகிறது. எனினும், புலிகளின் வட்டாரங்கள் இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை. (ஐ)

## ரணில் மீது குற்றச்சாட்டுக்கள் அடுக்குகின்றார் மகேஸ்வரன்



கொழும்பு,ஜன.23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தி கொண்டிருக்கும் இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதமர் மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றார்.

தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிட்டுள்ள அவர், அந்தக் கடிதத்தில் தாம் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக தெளிவான - திட்டவட்டமான - நடவடிக்கைகளை எடுக்க பிரதமர் முன்வரும்வரை அவரைச் சந்தித்துக் கலந்துரையாடவோ, அவருடன் இணைந்து செயற்படவோ தாம் தயாரில்லை என்றும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.



தி.மகேஸ்வரன் பிரதமர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளில் சில வருமாறு:-

★ சமூகவிரோதக் கட்சிகளான தமிழ்க் குழுக்கள் சேவைற்றுக்கு கூலிப்படை என்ற முறையில் முன்னைய அரசு மாதாந்தம் பல லட்சம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுச்சேவை பதவி நியமனம் வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

கொழும்பு,ஜன.23

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தரவுப்பதிவு இயக்குநர் பதவிக்கு - 121 புள்ளிகள், எழுதுவினைஞர் பதவிக்கு - 157 புள்ளிகள், தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு - 98 புள்ளிகள், படவரைஞர் பதவிக்கு 110 புள்ளிகள், கணக்குப் பதிவுநர் பதவிக்கு - 228 புள்ளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளின் தலைவரைச் சந்திக்கத் திட்டம்

கொழும்பு,ஜன.23

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ரொண்ட் புருஹோவ்டே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை விரைவில் சந்திக்கவிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. எதிர்வரும் 27ஆம் திகதி அல்லது 28ஆம் திகதி இச் சந்திப்பு நடைபெறலாம் என்று தெரிகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான பல விடயங்கள் குறித்து புலிகளின் தலைவரை கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிளிநொச்சியில் சந்திக்கவிருக்கிறார் என்று கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவரான ஹொக்லண்ட் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் இயக்க தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டுககு மாறாக கீழ்

(14ஆம் பக்கம் பார்க்க)





## விமானம் வீழ்ந்த இடத்தில்...





# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்

### வடக்கு - கிழக்கு மாணவர்களும் கலந்துகொள்வர்

கொழும்பு,ஜன.23

இலங்கையின் 55ஆவது சுதந்திர தினத்தை இம்முறை நாடெங்கிலும் வெகுவிமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பிரதான கொண்டாட்டம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும்.

ஜனாதிபதியும் பிரதமரும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்ளும் சுதந்திர சதுக்க வைபவத்தில் முதன் முறையாக வடக்கு - கிழக்கு பாடசாலை மாணவர்களும் கலந்துகொள்கின்றனர். இம்மாணவர்களின் பாரம்பரிய கலாசார அணி வகுப்பும் நிகழ்வுகளில் இடம்பெறும்.

இதுவரை காலமும் சுதந்திர தினக் கொண்டாட்ட ஏற்பாடுகள் பொது நிர்வாக அமைச்சின் மூலமே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இம்முறை உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சுதந்திரதின விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெறவும் சுதந்திரதின வைபவங்கள் சிறப்பாக அமைவதற்குமாக பெப்ரவரி 2ஆம் திகதி இரவு பிரித் ஓதும் வைபவம் உள்ளூராட்சி அமைச்சில் நடைபெறும். 3ஆம் திகதி காலை தானம் வழங்கப்படும்.

4ஆம் திகதி காலை சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம்பமாகும். தேசபிதா டி.எஸ். சேனாநாயக்காவின் சிலைக்கு பிரதமர் மலர் மாலை அணிவிப்பார். ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்.

இதேவேளை, மாவட்ட ரீதியாகவும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

(ஐ-4)

### ஓட்டோ சாரதிகளுடனான முறுகலை அடுத்து

# பருத்தித்துறையில் பஸ்கள் டிப்போவிலிருந்தே சேவை

வடமராட்சி,ஜன.23

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையைச் சேர்ந்த பஸ்கள் அனைத்தும் இன்று முதல் மறுஅறிவித்தல் வரை பருத்தித்துறை டிப்போவில் இருந்தே சேவைகளை ஆரம்பிக்கும் என சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். பருத்தித்துறை பஸ் நிலைய அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த நேரக் கணிப்பாளர், நடத்துநர் ஆகியோர் மீது ஓட்டோ சாரதிகள் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படும் சம்பவத்தை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கும் ஓட்டோ சாரதிகளுக்கும் இடையில் அடிக்கடி நிலவிவந்த தகராறே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஓட்டோ சாரதிகள் இருவரை பருத்தித்துறை பொலீஸார் நேற்று பருத்தித்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்கள் இருவரையும் நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ-173)

## மாட்டுவண்டியை மோதியது தட்டிவான்

வடமராட்சி,ஜன.23

குழைப் பாரத்துடன் வீதி அருகே நிறுத்திவைக்கப்பட்டிருந்த மாட்டு வண்டிமீது அதிகாலைப்பொழுதில் வேகமாக வந்த தட்டிவான் ஒன்று மோதியதால் மாட்டுவண்டி பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்சம்பவம் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக இடம்பெற்றுள்ளது. மாட்டுவண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடுகள் அதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறோர் இடத்தில் கட்டப்பட்டிருந்ததால் அவை உயிர் தப்பின.

(ஐ-173)

## பரந்தன் - கொக்காவில் வீதி திருத்தப்படுகிறது

ஏ-9 வீதியில் பரந்தன் முதல் கொக்காவில் வரையிலான பகுதியைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நேற்றுமுன்தினம் முதல் கிளிநொச்சி நகரிலிருந்து நடைபெறுகின்றன.

ஏ-9 வீதி மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்ட பின்னர் தற்காலிகமாக செப்பனிடப்பட்டிருந்தது. இருப்பினும் சீரான வாகனப் போக்குவரத்துக்குரியதாக இவ்வீதி இல்லை.

(ஐ)

### சமாதானப் பேச்சுக்கு முஸ்லிம் தரப்பைத் தெரிவுசெய்ய

# எம்.பிக்கள், புத்திஜீவிகள் கொண்ட சபையை அமைக்கும் முயற்சியில் கிழக்கு ஒன்றியம்

புத்தளம்,ஜன.23

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வது தொடர்பாக ஒரு சபையை உருவாக்குவதற்கும் பிளவுபட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை மீண்டும் ஒன்றிணைப்பதற்குமான முயற்சிகளில் இரண்டு அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

கிழக்கு முஸ்லிம் தொழில் தகைமையாளர் ஒன்றியம், மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த மக்கள் அமைப்பு ஆகியவையே இம்முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கின்றன.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் புத்திஜீவிகளையும் உள்ளடக்கிய ஒரு சபை அமைக்கப்படவேண்டும் எனவும், அவ்வாறு அமைக்கப்படும் சபை முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளை தெரிவுசெய்து அரசுக்கு சிபாரிசு செய்யப்படவேண்டும் எனவும் கிழக்கு ஒன்றியம் கருதுகின்றது.

இதுதொடர்பாக மு.கா.தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனும் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுடனும் ஒன்றியம் தனித்தனியே பேச்சுக்களை நடத்தியிருக்கிறது. வடக்கு-கிழக்கிலுள்ள புத்திஜீவிகள் அமைப்புகளுடனும் பேச்சுகள் நடத்தப்படுகின்றன.

சபை உருவாக்கும் திட்டத்துக்கு அமைச்சர் ஹக்கீம் பூரண ஆதரவு தெரிவித்திருக்கிறார் எனவும், அமைச்சர் அதாவுல்லாவை ஆதரித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பிரிவுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த மக்கள் அமைப்பின் செயலாளர் கே.எம்.ஏ.கபீர் விரைவில் இது தொடர்பான பேச்சுகள் நடைபெறும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

(ஐ)

# மாணவனை அடித்த அதிபர் பொலீஸ் விசாரணையில்!

பேருவளை,ஜன.23

மாணவனை தடியாலும் கையாலும் அடித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பாடசாலை அதிபர் ஒருவர் பொலீஸாரினால் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பேருவளைப் பகுதி முஸ்லிம் பாடசாலை ஒன்றில் நேற்று நடந்தது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவர், 8ஆம் ஆண்டில் கல்வி பயில்கிறார். வயது 13,தாயில்லாதவர். ஒரு நோயாளியும் கூட.

தாக்குதல் காரணமாக மாணவரின் இடது கண் பலமாக வீங்கியிருக்கிறது. அவர், சிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதுதொடர்பாக மாளிகாஹேனைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஐ)

# இணைய வந்த மூன்று சிறுவர்களை புலிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

மட்டக்களப்பில் புலிகளுடன் இணைய வந்த 14 வயதுடைய மூன்று சிறுவர்களை புலிகள் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு நாவலடியைச் சேர்ந்த ராஜேந்திரம் விஜே, தனபாலன் ரேகன், தோமஸ் ரகு ஆகியோரே இவ்வாறு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா இவர்களை மாமாங்கம் புலிகளின் அலுவலகத்தில் வைத்து பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையிடம் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், சிறுவர்களை இணைத்துக்கொள்வதில்லை என்று சில தினங்களுக்கு முன்னர் அளித்த உறுதிமொழிக்குப் பின்னர் சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.(ஐ)

# ஈராக்கை தாக்குவதற்கு ஜேர்மனி கடும் எதிர்ப்பு!

பேர்லின்,ஜன.23

ஈராக்கைத் தாக்குவதற்கு தான் ஒரு போதும் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை என்று ஜேர்மனி திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு ஐநா.பாதுகாப்புச் சபையின் பிரேரனை கொண்டு வரப்பட்டால் ஜேர்மனி அதனை ஆதரிக்காது என்றும் அது தெரிவித்துள்ளது.

ஜேர்மன் அதிபர் ஜெர்காட் ஸ்குரோடர் தனது கட்சியின் பொதுக்கூட்டத்தில் இதனை மிகத் தெளிவாக - திட்டவட்டமாக - அறிவித்தார்.

தன்னிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பதை வெளிப்படுத்த வழங்கப்பட்ட ஈராக்குக்கான நேரம் கடந்து கொண்டிருக்கின்து என்று அமெரிக்க அதிபர் புஷ் கருத்துத் தெரிவித்த சிறிது நேரத்தின் பின்னர் ஜேர்மனிய அதிபரின் கூற்று வெளியாகியுள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வீற்றோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பு நாடு ஜேர்மனி. இதுவரை பாதுகாப்புச் சபையில் தனது வீற்றோவை அது பயன்படுத்தியதில்லை. இனிவரும் காலத்தில் அதனை சுதந்திரமாகப் பயன்படுத்தும் உரிமை அதற்குண்டு.



'யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன்' விமானந்தாங்கிக் கப்பல் வளைகுடாநோக்கி புறப்பட்டுள்ளது. தாம் போருக்குத் தயார் எனத் தெரிவிக்கும் வகையில் கப்பலில் உள்ளவர்களால் 'இப்போது தயார்' (Ready Now) என்று எழுதப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஈராக் மீதான போர் அவசியமற்றதென ஜேர்மனியும் அதன் நேச நாடுகளும் கருதுகின்றன. ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் பக்தாத்தில் தமது பணியைச் சரிவரச் செய்வதற்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று அவை கோருகின்றன. எனவே, இத்தகைய ஒரு சூழ்நிலையில், பாதுகாப்புப் சபையில் ஈராக் போருக்கான பிரேரனை நிறைவேறுமா என்பது கேள்விக்குரியது.

இதனால், பாதுகாப்புச் சபையில் போருக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான ஆதரவைத் திரட்டுவது கடினம் என்ற நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா வரக்கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர். பிரேரணையை நிறைவேற்ற 15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் குறைந்தது 9 உறுப்பினர்களின் ஆதரவாவது அமெரிக்காவுக்கு வேண்டும்.

இதற்கிடையில் - சிரியா, எகிப்து, சவூதி அரேபியா, ஈரான், ஜோர்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இன்று இஸ்தான்புல்லில் கூடி, ஈராக் போரைத் தவிர்ப்பது எப்படி என்று ஆராயவுள்ளனர். துருக்கி இந்த கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செயதுள்ளது.

மேலும் இரு விமானந்தாங்கி கப்பல்களை வளைகுடாவுக்குச் செல்லுமாறு அமெரிக்கா உத்தரவிட்டதை அடுத்து துருக்கி அவசரமாக இந்த கூட்டத்தை கூட்டியுள்ளது.

### பிரிட்டன் ஆதரவு

இதேவேளை -

ஈராக்கைத் தாக்கும் அமெரிக்காவின முயற்சிக்கு பிரிட்டன் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என்பதற்கு உளவுத்தகவல்கள் இருக்கின்றன. எனவே, ஈராக் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் பிளையர் தெரிவித்துள்ளார். லண்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றின்முன் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் எந்த நாடாவது தனது வற்றோவைப் பயனபடுத்தினாலும் கூட, அமெரிக்கா ஈராக்கைத் தாக்கினால் பிரிட்டன் அதற்குத துணையாக போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று பிளயர் மேலும் கூறினார்.

### படைக்குவிப்பு

இது இவ்வாறிருக்க, வளைகுடாவுக்கு மேலும் இரு விமானநதாங்கிக் கப்பல்களை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. ஒவ்வொன்றும் 75 போர் விமானங்களைத் தாங்கிச் செல்லக் கூடியவையான 'யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன்' 'யு.எஸ்.எஸ். தியோடர் ரூஸவெல்ட்' ஆகிய இரு விமானந்தாங்கிக் கப்பல்களுமே அனுப்பப்பட்டுள்ளன. இதுதவிர, ஏற்கனவே மேலும் இரு விமானந்தாங்கிக் கப்பல்கள் வளைகுடாவில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவைகள் குறிப்பிட்ட தூரத்தில் இருந்தே ஈரக்கைத் தாக்கும் வலுமிக்கவை. அதுமட்டுமன்றி, கடற்போர் கலங்கள் நீர்மூழ்கிகள் என்பவற்றுக்கும் முழுப்பாதுகாப்பு வழங்கக் கூடியவை.

இக்கப்பல்கள் வளைகுடா மெடிற்றேனியன் அல்லது செங்கடல் ஆகிய இடங்களிலிருந்து தாக்கவல்லவையாதலால் ஈராக்கைப் பல கோணங்களிலிருந்து தாக்க அமெரிக்காவால் முடியும். (ம)


சதாமின் படத்தை தாங்கியவாறு பக்தாத்தில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக்கியப் பெண்கள்.

## செர்பிய முன்னாள் அதிபர் ஹேக் நீதிமன்றில் சரண்!

செர்பியாவின் முன்னாள் அதிபர் மிலன் மிலுஷனோவிக் போர்க் குற்றச்சாட்டுகளுக்காக சர்வதேச போர்க குற்ற நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

1998-99 காலப்பகுதியில் இடம் பெற்ற கொசோவா பிரச்சினையின் போது அல்பேனிய இனத்தவரை படுகொலை, நாடு கடத்தல், துன்புறுத்தல் போன்றவற்றுக்கு உள்ளாக்கியதில் யூகோஸ்லாவியாவின் அப்போதைய தலைமைக்கு உதவியதாக மிலுஷனோவிக் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இன ஒழிப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஹேக், நீதிமன்றத்தில் விசாரணைகளை எதிர்கொண்டுள்ள யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோசெவிக்குடன் மிலுஷனோவிக் இணைந்து அல்பேனிய இனத்தவருக்கு எதிராகப் போர்க் குற்றங்களைப்புரிந்தார். என்று வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இறுதிவரை மிலுஷனோவிக் அதிபர் பதவியிலிருந்தார். தனது பதவியைப் பயன்படுத்தி போர்க குற்ற விசாரணையை எதிர்கொள்ளாது அவர் தவிர்த்து வந்தார்.

ஆனால், தற்போது பதவியிலிருந்து அகன்றபின்னர், விசாரணைகளை தவிர்க்கும் நிலை மாறிவிட்டது.

## ஈராக் விஞ்ஞானிகளிடம் விரைவில் ஐ.நா. பரிசோதகர் குழு விசாரணை

பக்தாத்,ஜன.23

ஈராக்கின் ஆயுத விவரம் குறித்து அந்நாட்டு விஞ்ஞானிகளிடம் விரைவில் விசாரணை நடக்கும்.

ஆயுத சோதனை அதிகாரிகள் குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் இந்தத் தகவலை செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

ஆயுத சோதனையைத் தீவிரப்படுத்துவது, ஈராக்கிடம் ஏராளமாக இருந்த உயிரியல் இரசாயன ஆயுதங்கள் என்னவாயின என்பதற்கான விடைகளைப் பெறுவது குறித்து ஈராக் அதிகாரிகளிடம் ஆயுதச் சோதனை அதிகாரிகள் இரு நாள்களாகப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக் குறித்து ஐரோப்பிய யூனியனிடம் தகவல் தர பிளிக்ஸ் ஏதென்ஸ் வந்துள்ளார்.

## அணு ஆயுதங்களை தயாரிக்கப் போவதில்லை

### வடகொரியா தென்கொரியாவிடம் தெரிவிப்பு

சியோல்,ஜன.23

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் திட்டம் எதுவும் இப்போது இல்லை என்று வடகொரியா, தென்கொரியாவிடம் தெரிவித்துள்ளது.

இரு கொரியாக்களுக்கும் இடையில் அமைச்சரவை மட்டத்தில் இடம் பெற்ற உயர்மட்டப் பேச்சுகளின் போது வடகொரியா மேற்படி கருத்தை தென்கொரியாவிடம் தெரிவித்துள்ளது.

தனது அணு உலைகளை வடகொரியா மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்த பின்னர் - கொரியக் குடாவில் ஏற்பட்ட நெருக்கடிகளின் பின்னர் - கடந்த 3 மாதங்களின் பின்னர் - இரு கொரியாக்களுக்கும் இடையே நடைபெறும் முதலாவது பேச்சு இது. "தென்கொரியா தனது கவலையைத் தெரிவித்ததை அடுத்து இந்த விடயத்தில் தனது நிலைப்பாட்டை வடகொரியா கைவிட்டது" - என்று தெனகொரிய பேச்சுக்குழு பேச்சாளர் ரோ பொங் - ஜோ தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின் போது கொரியாக்கள் இடையேயான உறவுகளை மேம்படுத்துவது குறித்தே முககியமாக ஆராயப்பட்டது என்றும் - அவர் சொன்னார்.

இதேவேளை -

வடகொரியாவின் அணுவாயுத விவகாரம் குறித்து அமெரிக்க வெளிவிவகாரத் துணைச் செயலர் ஜோன் பொல்டன் சியோலில் தென்கொரிய வெளிவிவகார அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளார்.

வடகொரியாவை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்குக் கட்டுப்பட்டு நடத்துமாறு தூண்டுவதற்கு வாஷிங்ரன் தென்கொரியா மூலம் முயல்வதாகத் தெரிகிறது. (ம)

உலக அரங்கில்

### மெக்சிக்கோவில் பெரும் நிலநடுக்கம்

மெக்ஸிக்கன்சிற்றி,ஜன.23

மெக்ஸிக்கோவில் நேற்று பெரும நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 19 பேர் உயிரிழந்ததாகவும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்ததாகவும் முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நிலநடுக்கம் காரணமாக தலைநகருக்கான மின்சார விநியோகம் நேற்று தற்காலிகமாக பாதிக்கப்பட்டது. உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்கு இந்நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்சட்டர் அளவுகோலில் அது 7.6 புள்ளியாக பதிவானது.

எனினும் பெருமெடுப்பில் கட்டடங்கள் இடிந்துநொருங்கவில்லை. இதனால், அதிகளவான சேதம் தவிர்க்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

### மசூதியில் ஆயுதங்கள் சிக்கின

பிரிட்டனின் லண்டன் மாநகரில் உள்ள மசூதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் அங்கிருந்து துப்பாக்கி உட்பட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் அறிவிதுள்ளனர். இது தொடர்பாக 7 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் சுத்திகரிப்புத் தொழிலாளி அல்லது காவலாளிக்குச சொந்தமானவையாக இருக்கக் கூடும் என்று மசூதியின் மதகுரு ஷேக்அபு ஹம்சா கூறினார்.

ஹெலிகளிலும் 10 இற்கும் மேற்பட்ட விமானங்களிலும் வந்த 150 அதிகாரிகள் திடீரென மசூதியில் நுழைந்து சோதனையிட்டமைக்கு அவர் கண்டனம் தெரிவித்தார். (ம)

### அமெ. உளவு விமானம் நொறுங்கியது

ஆளின்றி இயங்கும் அமெரிக்கத் தானியங்கி உளவு விமானம் ஒன்று பாகிஸ்தானின் தென்பகுதியில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

கராச்சி நகருக்கு அருகே உள்ள ஜாக்கோபாத் விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வீழ்ந்து நொறுங்கியது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத்தான் விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், தீவிரவாதிகளின் சதி மூலம் விமானம் வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

வீழ்ந்து நொறுங்கிய விமானத்தின மதிப்பு இலங்கைப் பெறுமதியில் சுமார் 28 கோடி ரூபா ஆகும். இந்த மாதத்தில் பாகிஸ்தானில் வீழ்ந்து நொறுங்கும் இரண்டாவது அமெரிக்க தானியங்கி விமானம் இதுவாகும்.

### அமெரிக்கா எச்சரிக்கை

நியூயோர்க்,ஜன.23

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை ஈராக் அதிபர் சதாம் ஹூசைனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால் தன் கடமையை அது சரியாகச் செய்யவில்லை என்ற பழிக்கு ஆளாக வேண்டிவரும்.

- இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல். பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் குழுவுக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அது தொடர்ந்து தன பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து வருகின்றது. எனவே, ஈராக் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பவல் அங்கு கூறினார்.


### இந்தோனேசியாவில் 50 குண்டுகள் மீட்பு

இந்தோனேசியாவில் படுவா மாகாணத்தில் பூமியிலிருந்து பல்வேறு வடிவங்களில் 50 இற்கும் மேற்பட்ட குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இடம் விமான நிலையம் அருகேயுள்ள இடமாகும்.

கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகளில் 27 இன்னும் செயல் திறனுடன் இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் படைகள் தங்களது ஒரு தளமாகப் பயன்படுத்திய பகுதியாகும். அங்கு மேலும் குண்டுகள் புதையுண்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

கொம்பியூட்டர் டிப்ளோமா பாடநெறிகள்



* MS Office XP
* Computer Studies
* Desktop Publishing
* Web Design
* Computer Programming

சான்றிதழ் பாடநெறிகள்
Certificate in Pagemaking
Certificate in Corel Draw
Certificate in Photoshop
Certificate in Visual Basic
Certificate in HTML

காலம் 3 மாதங்கள்
தமிழில் விளக்கங்களுடன் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

ASIAN COMPUTERS
2G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அறிமுக கட்டணச் சலுகை 2,900/- ஜனவரி 31 வரை மட்டுமே
அனைத்து பாடநெறிகளுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

# குடும்ப நிலையால் வாடியோரே பகிடிவதையில் ஈடுபடுகின்றனர்!

## வண.பிதா எஸ்.டேமியன் கருத்துரை

குருநகர்,ஜன.23

குடும்பத்தின் துன்பத்தைப் பார்த்து அடங்கிப்போனவர்களே பகிடிவதையில் ஈடுபடுகின்றார்கள்.

அகவொளி குடும்ப வளத் துணை நிலையத்தில் நடைபெற்ற 'வன்முறையற்ற தொடர்பாடல்' என்ற தொனிப்பொருளில் கருத்துரை வழங்கிய போது யாழ்.சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் வண.பிதா எஸ்.டேமியன் (அ.ம.தி.) அவர்கள் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் முழுநிலா நாள் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை அகவொளி குடும்ப வளத்துணை நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ்.இராசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இதில் அருட்திரு. எஸ்.டேமியன் தனது கருத்துரையில் மேலும் கூறியதாவது:-

"எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவ்வாழ்க்கையில் நிறைய வன்முறை உள்ளதைக் காணலாம். எமது பேச்சு, நடத்தை, உணர்வு, பழக்கவழக்கம், மனக்கிளர்ச்சிகளில் இந்த வன்முறை உள்ளதை நாம் உணரலாம்.

நாம் வன்முறை நிறைந்த கலாசாரத்தில் வாழ்கின்றோம். போர் ஓய்ந்தபின் வன்முறை அதிகரிக்கின்றது. கலாசாரச் சீரழிவு தோன்றுவது அடக்கி ஒடுக்கப்படுவதன் வெளிப்பாடேயாகும். எமது நோக்கம் மறுக்கப்படும்போது அடக்கப்பட்ட நோக்கம் கலாசாரச் சீரழிவாக உருவாகிறது.

எங்களுடைய குடும்பங்களில் வன்முறை உள்ளது. கணவன் - மனைவிகளுக்கிடையே, பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையே, சமூகங்களுக்கிடையே இந்த வன்முறைச் செயற்பாடு காணப்படுகிறது.

எங்களுடைய இயல்பான சுபாவம் வன்முறையற்ற சுபாவமாகும். சந்தர்ப்ப சூழ்நிலையால் நாம் வன்முறைக்குத் தூண்டப்படுகிறோம். தலையிலிருந்து உதிரும் முடிகூட வன்முறைக்குக் காலாக மாறிவிடுகிறது. ஒரு சின்ன விடயத்தை தவறாக எடுப்பதனால் கருத்து வேற்றுமை உருவாகிறது. கருத்துவேற்றுமை வளர வளர அது வன்முறையாகி மாறி விடுகிறது.

வன்முறையற்ற தொடர்பாடல் எமது இயல்பு. அது ஒரு மொழி. பரிவு, கருணை, காருண்யம், இரக்கம் நிறைந்தவர்கள் பேசுகின்ற ஒரு மொழியாக இதைக் கொள்ளலாம். எமது இதயத்தில் இருந்து ஊற்றெடுத்த மற்றவர்களுக்கு வழங்கும் ஒரு மொழியாகும். வன்முறையற்ற தொடர்பாடல் சமூகத்தில் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவரலாம். ஆன்மீகப் பயிற்சிக்கு நெறியாகவும் இது அமையலாம். எது எமமிடையே கூடுகிறதோ அதனை அறிய இத்தொடர்பாடல் வழிசமைக்கிறது.

எமது நடத்தைக்கு நாங்களே பொறுப்பாகும். நாம் பிறரோடு கொண்டுள்ள தொடர்பு விரிவடையும்போது எங்கள் வாழ்க்கை முறையையே இவ்வன்முறையற்ற தொடர்பாடல் மாற்றி அமைக்கிறது.

நாம் வன்முறை அற்றவர்களாகவே இருக்க முயல்கிறோம். ஆனால், எமது சொல், செயல்மூலம் நாம் வன்முறைக்கு உள்ளாகிறோம்.

வன்முறையற்ற தொடர்பாடல் ஐந்து அம்சங்களைக் கொண்டுள்ளது.

### அவதானிப்பு

நாம் பலவற்றை அவதானிக்கிறோம். உண்மையை நாம் திரிவுபடுத்துகிறோம். பார்த்தல், கேட்டல் மூலம் இந்த அவதானிப்பு செயற்படுகிறது. நாம் ஒரு விடயத்தைப் பார்க்கும்போதும் அதனைக் கேட்கும்போதும் அவ்விடயத்தைப் பகுப்பாய்வு செய்யாமல் உண்மையாகவே அவ்விடயத்தை நோக்கினால் பிரச்சினை தோன்றாது.

### உணர்வுகள்

நாம் ஒரு செயலைக் காணும்போது எமது உணர்வுகள் வேலை செய்யத் தொடங்குகின்றன. ஒரு காட்சி எமக்கு துக்கமான அல்லது சந்தோஷமான செயலை ஏற்படுத்துகிறது. உள்ளதை நாம் அப்படியே பார்க்கும்போது உன்னதத் தன்மை ஏற்படும். ஆனால், அதனைப் பகுப்பாய்வு செய்தோமானால் அது விரோதமாக அமைகிறது. எங்களது உணர்வு என்ன என்பதை கண்டுபிடிப்பது எமக்குக் கஷ்டம்.

நாம் எல்லோரும் உணர்வுகள் நிறைந்த மனிதர்கள் இதற்கு நாம் வெட்கப்படவோ, கூச்சப்படவோ தேவையில்லை. உணர்வுகள் மனிதனுக்குத் தேவை. உணர்வுகளை நாம் அடையாளம் கண்டு இனம் காணப் பழகவேண்டும். பயப்படுகின்ற, எரிச்சலை ஏற்படுத்தும் உணர்வு தோன்றலாம். எமது உணர்வுகள் முக்கிய அம்சமாகும்.

### தேவைகள்

எமக்கு நிறையத்தேவைகள் உண்டு. ஒவ்வொரு உணர்வுகளுக்குப் பின்னாலும் எமக்கு நிறையத் தேவை உருவாகிறது.

### வேண்டுகோள

பாடசாலை முடிந்த பின்பு வீட்டுக்குவரும் தனது மகனது செயலைக் கண்டு அவனது தேவை என்ன என்பதை உணர்ந்து அதனை நிறைவேற்ற வேண்டிய தன்மையை தாய் அறிந்திருக்க வேண்டும். தாய், மகன ஒழுங்கானவனாக வளர வேண்டுமென விரும்புகிறாள். பரிவு மொழி அவர்களுக்குள் ஏற்படும்போது இருவருக்குமிடையே வன்முறையற்ற நடைமுறையை உருவாக்கும்.

கோபத்துக்குப் பின்னால் தேவையுண்டு. இருவரும் ஓர் ஒத்த உணர்வைக் கொண்டிருக்கும்போது இருவருக்குமிடையே வன்முறையற்ற செயல் உருவாகும். திருப்பத் திருப்ப ஒத்துணர்வை வழங்கி எதிரியை அதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுவது வன்முறையற்ற கலாசாரத்தை ஏற்படுத்தும். ஒரு பிரச்சினையை மறுசீரமைக்குமாறு எதிராளியை வேண்டுதல் வன்முறையற்ற செயலுக்குக் காலாக அமைகிறது. இதன்மூலம் அயலவர்களுடன் சமூகத்துடன் ஒத்துணர்வை ஏற்படுத்தி அமைதியான உறவை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு பிரச்சினை உருவாகும்போது தன்னுடைய நிலையில் இல்லாமல் மற்றவரது பிரச்சினையைத் தனக்கு நடக்கும் பிரச்சினைபோல நாம் பார்க்கவேண்டும். அவருடைய பிரச்சினைக்குள் நாம் புகுந்து அவருடன் தொடர்புகொள்ளவேண்டும். எமது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து கொடுக்கும்போது அது வன்முறையற்ற தொடர்பாடலாக உருவாகிறது.

### ஒத்துணர்வு

ஒத்துணர்வுமூலம் வன்முறையற்ற தொடர்பாடல் வரக்கூடியதாக உள்ளது.

எம் ஒவ்வொருவரினது மனதிலும் ஒட்டகச்சிவிங்கியினதும் குள்ள நரியினதும் மனம் உள்ளது. எமது மனதில் இருந்து வெளிவரும் செயற்பாட்டை பேச்சை அவதானித்தால் இத்தகைய போக்கை உணர்ந்து கொள்ளலாம். இதனைக் குள்ளநரி பேசும் மொழி, ஒட்டகச்சிவிங்கி பேசும் மொழி என உளவியலாளர்கள் கூறுவர். நாம் மற்றவர்களில பிழை கண்டுபிடிக்கிறோம். இதுதான் நரியினது வேலையாகும். ஒட்டகச்சிவிங்கியினது மொழி எல்லா விடயங்களையும் பரிவோடு பார்க்கும் மொழியாகும். ஒட்டகச் சிவிங்கியினது மொழி எமது உள்ளத்திலிருந்து வருவது.

குள்ள நரியின் செயற்பாடு நிலத்தில் ஓடித்திரிவது. உடனடித் தேவையைப் பூர்த்தி செய்வதே அதன் நோக்கம். வருங்காலத்தைப்பற்றி யோசிப்பதில்லை. கோழியைக் கண்டதும் அடித்துச்சாப்பிடும் ஒருவனை முட்டாள் என்றும் அவன் செய்வது பிழை என்றும் தீர்ப்பிடுகிறோம். குள்ளநரியின் மொழி எமக்கு சந்தோஷமற்ற தன்மையை ஏற்படுத்துகின்றது.

ஒட்டகச்சிவிங்கி மிகவும் உயரமானது. அனைத்து இடங்களையும் உயரத்திலிருந்து பார்க்கும் தன்மையுடையது.

ஒட்டகச்சிவிங்கியின் இதயம் அகண்டது என அறியப்பட்டுள்ளது. ஒட்டகச்சிவிங்கி பரந்த நோக்குடையது. ஆனால், குள்ளநரி மறைந்திருந்து பார்க்கும் தன்மையுடையதாக உள்ளது.

"உன்னை ஒருபோதும் திருந்த முடியாது என்று ஒருவனைப் பார்த்து நாம் கூறும்போது நாம் அவனைத் தீர்ப்பிடுகின்றோம். வன்முறையற்ற தொடர்பாடலுக்கு பகுப்பாய்வு செய்து தீர்ப்பிடும் மொழிகள் தேவையில்லை. பரிவு, தொட்டுப்பேசும் மொழி, அன்பினால் உந்தப்பட்டுப் பேசும் மொழி தேவை. ஆனால், இவை எம்மிடையே கைவிடப்பட்ட மொழியாக உள்ளது. பரிவுள்ள, கருணையுள்ள, இரக்கமுள்ள மொழியை பேசுவதன் மூலம் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கலாம்.

பலாத்காரமாக வாழவேண்டுமென்பது எமது வாழ்க்கைமுறையல்ல. எமது தேவைகள் பூர்த்திசெய்யப்படாதபோது நாம் வன்முறைக்கு செல்கிறோம். ஒவ்வொரு உணர்வுக்குப் பின்னாலும் ஒரு தேவை உண்டு. மனிதனது சுபாவம் வன்முறையற்றது. அது எங்களுக்குள்ளேயே உள்ளது.

பல்கலைக்கழகங்களில் தற்போது மேற்கொள்ளப்படும் பகிடிவதை வெளிநாட்டில் ஆரம்பித்தது. அதை அவர்கள் சமூக ஒன்றுகூடலாகப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் பார்த்த பார்வையில் நாம் பார்க்கவில்லை. எமக்கும் சந்தோஷம், மகிழ்ச்சி, தேவைதான். ஆனால், அது மற்றவர்களைப் பாதிக்கக்கூடாது. ஒருவரை துன்புறுத்தி அடைவது உண்மையான மகிழ்ச்சியல்ல.

குடும்பத்தில் நடந்த துன்பத்தைப் பார்த்து அடங்கிப் போனவர்களே இந்தப் பகிடிவதையில் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது. அடக்கி வைக்கப்பட்டுள்ள உணர்வுகளின் வெளிப்பாடே பகிடிவதையாக மாறுகிறது. குடும்பப் பின்னணியும், அவர்கள் வளர்ந்த வளர்ப்பும், வீட்டில் அடங்கிக் கிடந்ததும், வெளியே வந்ததும் அதைத் தவறான வழியில் பயன்படுத்தியுள்ளார்கள். மற்றவர்களைத் துன்புறுத்தி இவர்கள் அடைந்த சந்தோஷம் இவர்களது தேவையைப் பூர்த்திசெய்தது.

நாம் ஒவ்வொருவரும் பரிவு என்ற மொழியை எமது உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளவேண்டும். பரிவு என்பதை வளர்க்கப் பலகாலம் செல்லலாம். நாம் போர் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏதோ சில தவறுகள், வன்புகுழல், ஊடகச் செய்திகள் இந்த வன்முறையுள்ள செயலுக்கு காலாக அமைகிறது.

மற்றவர்களைத் தீர்ப்பிடுவதற்கு நாம் யார்? ஆனால், அதையே நாம் செய்து கொண்டிருக்கிறோம். இது தவறாகும் என்று அவர் கூறினார்.

(ஓ-51)



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தின் போது கந்தபுராண சொற்பொழிவாற்றிய வை.நித்தியானந்தசர்மாவுக்கு ஆலயத்தில் இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் ஆசிரிய மணி ஆ.பஞ்சாட்சரம், யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் ஆகியோர் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர். இதன போது எடுக்கப்பட்ட படம் இது. (ஓ)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி எலிசபெத் நவரத்தினம் (ஆசிரியை)**

*திதி - 23.01.2003*

ஏழாம் நாள் விண்வாழ்வு இனிதாய் அமைய - **வேண்டி**
ஏழாம் ஆண்டுத் திதியில் உனக்காகப் பிரார்த்தனை - இன்று
சிறப்போடு பூசனை சுற்கு விருப்போடு - இயற்றுகின்றோம்
பிறப்பறுப்பான் பாதங்களிற் சிறப்புறுக - இனிது.


*'குமரகோட்டம்'*
*மானிப்பாய் வீதி,*
*கோப்பாய்.*

(13567)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்,**
**உறவினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
-
08
-
1948



மறைவு
20
-
01
-
2002

**அமரர் வேலுப்பிள்ளை பாலசுந்தரம்**

*எமது பாசத்தின் உறைவிடமே!*
*எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே!*
*ஆண்டு ஒன்று கடந்தாலும்*
*ஆறுதில்லை அண்ணா உம் நினைவுகள்!*
*உங்கள் நினைவுடன் என்றும் நாம்.*

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (23.01.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*

(13574) - குடும்பத்தினர்.

## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் 10ஆம் நாள் (24.01.2003) வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அனலைதீவு, புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரப் பெருமான் திருவருளும், சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளும், இர்தமதகுரு பீடாதிபதி சிவ ஸ்ரீ சபாகேஸ்வர சிவாச்சாரியாரின் ஆசியுடன்

**சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் கணேசராச சர்மா** அவர்களுக்கு
(சரவணை கதிர்வேலாயுத சுவாமி கோயில், நாரந்தனை கந்தசுவாமி கோயில் பூசகர்)

சிவாச்சார்ய அபிஷேகம் நடைபெறத் திருவருளும் குருவருளும் கைகூடி இருப்பதனால் அனைவரும் அவ்வமயம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீக்ஷா குரு:- சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்
இடம்:- **சரவணை பள்ளம்புலம் அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி திருக்கோயில் மண்டபம்.**

இவ்வண்ணம்: பிரம்மஸ்ரீ ந.கணேசராச சர்மா
நித்தியானந்தினி தம்பதிகள்.

*சரவணை.*

(13568)

யாழ்ப்பாணம்

## உதயன்

# அமைச்சர் மகேஸ்வரன் ஏற்படுத்தும் சர்ச்சை

அடிக்கடி சர்ச்சைக்கு உள்ளாகும் அமைச்சர் மகேஸ்வரன் மீண்டும் ஒரு தடவை குழப்பத்தைக் கிளப்பியிருக்கின்றார்.

அரசுத் தரப்பில் இருந்தவாறே எதிர்க்கட்சி உறுப்பினர்போல தாம் செயற்படப்போவதாக அவர் அறிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 19 எம்.பிக்கள் இருக்கின்றார்கள். அவர்களில் 18பேர் தமிழர் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய தரப்புகளைச் சேர்ந்தவர்கள்.

இந்தப் பதினெட்டுப் பேரும் எதிர்க்கட்சியில் இருப்பது 'ஒப்புக்குச் சப்பாணி கொட்டுவது' போன்றது என்பதுதான் அமைச்சர் மகேஸ்வரனின் கருத்து. அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தாலும் எல்லா விடயங்களிலும் அரசுத்தரப்புக்கு ஆதரவாக நடந்து கொள்கின்றனர். எனவே, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் எவரும் இல்லை என்பது மகேஸ்வரனின் வாதம். அதனால் தாம் அரசில் இருந்தவாறே அந்த வேலையைச் செய்யப் போவதாக அவர் கூறுகின்றார். நல்லது.

ஆனால், அவர் தற்போது கூறியுள்ள மற்றைய விடயங்கள்தான் இடிக்கின்றன.

ஒன்று - ஜனாதிபதி குமாரதுங்கவை நெருங்கி அரசியல் செயற்பாடுகளில் தாம் ஈடுபடப்போவதாக அவர் கூறியிருப்பது.

மற்றையது - பிரதமர் ரணிலின் போக்கில் தமக்கு நம்பிக்கையீனம் என அவர் அறிவித்திருப்பது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை பெரும்பான்மையினரின் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே ஒருவகையில் ஒரு குட்டையில் ஊறிய இரு மட்டைகள்தாம். அதில் சந்தேகமில்லை.

"நான் ஐ.தே.கட்சியில் சேர்ந்து, அதன்மூலம் நாடாளுமன்றத்துக்கு வந்தது, அங்கு எனது மக்களின் பிரச்சினையை ஒலிக்கச் செய்வதற்குத் தான். ஐ.தே.கட்சியை யாழ்ப்பாணத்தில் வளர்க்கவோ, நிலைநிறுத்தவோ அல்ல. அது எனது வேலையுமல்ல" - என்று அவர் அப்பட்டமாகக் கூறியிருப்பதுகூட பெரும்பான்மைக் கட்சிகளின் தமிழர் நிலைப்பாடு பற்றிய தாற்பரியத்தை அவர் நன்கு உணர்ந்ததால்தான் என்றே கொள்ளவேண்டும்.

ஆனால், ரணிலின் அரசுடன் இன்று அமைதிப் பேச்சை - சமாதான முயற்சிகளை - இலங்கைத் தமிழர்கள் ஆரம்பித்திருக்கும் இந்த வரலாற்றுச் சூழ்நிலையில், ரணில் தரப்பில் இருந்து ஒருவர் - அதுவும் ரணிலின் ஐ.தே.கட்சியில் இடம்பெற்றிருக்கும் ஒரேயொரு இலங்கைத் தமிழரான எம்.பியும் - ஜனாதிபதி சந்திரிகா பக்கம் சாய்வது மிகவும் சர்ச்சைக்குரியதாகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவையும் இந்தச் சமாதான முயற்சிகளின்பால் இழுத்து வந்து, அதனோடு அவரையும் ஒத்து ஓடச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்குமானால் தப்பில்லை. ஆனால், அதை விடுத்து ஜனாதிபதி குமாரதுங்கவின் வலையில் வீழும் செயலாக அது போய்விடக்கூடாது.

"எந்தப் பிரச்சினைக்கும் விட்டுக்கொடுப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறுகின்றார். இந்தச் சமாதான முயற்சிகள் பெற்றிபெறவேண்டும் என்பதில் தாம் நேர்மையாகவும் உறுதியாகவும் இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்" - என்று நம்பிக்கை தெரிவிக்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

1994முதல் இலங்கை அரசியலில் தமிழர் தரப்புத் தொடக்கம் பலர், ஜனாதிபதி குமாரதுங்கவின் இத்தகைய ஆசை வார்த்தைகளை நம்பி - மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியதுபோல - ஏமாந்துபோன தொடர்கதைகள் உண்டு.

1994இல் சமாதான தேவதையாகக் காட்சியளித்த அவர், 1995இல் தனது போர்வெறி முகத்தைக் காட்டியபோதுதான் தமிழர்கள் யதார்த்தத்தை உணர்ந்துகொண்டார்கள்.

இப்படி ஏமாந்த அரசியல்வாதிகளின் வரிசையில் அமைச்சர் மகேஸ்வரனும் இணைந்துகொள்ளும் நிலை வராவிட்டால் சரிதான்.

பிரதமர் ரணிலின் போக்கில் தமக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் கூறியுள்ளார். எவ்வாறு நம்பிக்கையீனம் ஏற்பட்டது, அதன் பின்னணி - உண்மைத் தகவல்கள் - ஆகியவற்றை எல்லாம் அமைச்சர் மகேஸ்வரன் வெளிப்படுத்தவில்லை.

தற்போதைய நிலையில் அரசுத் தரப்புப் பக்கம் காலூன்றி நிற்கும் அவருக்கு, ஏதேனும் உள்வீட்டு விவகாரங்கள் தெரிந்திருக்கும். அதனால்தான் இத்தகைய கருத்தை அவர் வெளியிட்டிருக்கலாம் என்று ஊகிக்கமுடிகின்றது.

அரசை நம்பி - பிரதமர் ரணிலின் போக்கில் திருப்திப்பட்டு - சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கும் தமிழர் தரப்புக்கு இவற்றை வெளிப்படுத்துவதுதான் அவரது முக்கிய பொறுப்பாகும். பிரதமர் ரணிலை மொட்டையாக விமர்சித்து என்ன பயன்?

# உரிமையை நாமாகப் பெறும் நிலையிலேயே அரசு எம்மைப் பேச்சுக்கு அழைத்தது!

## மகளிர் அரசியல் பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,ஜன.23

அடுத்த தலைமுறை உங்களிடம் கேட்கும் முறையில் கேட்பார்கள். அப்போது உங்களால் எதுவும் செய்யமுடியாத நிலைமையே காணப்படும் என்று பேரினவாதிகளுக்கு தந்தை செல்வா அன்று நாடாளுமன்றத்தில் எச்சரித்தார்.

அதேபோன்று இன்று நாங்கள் கேட்கும் முறையில் கேட்டோம். அதனால் கேட்காமலேயே பெறப்போகின்றோம் என்ற நிலை ஏற்பட்டது. அவ்வேளையில், அரசு எம்மைப் பேச்சு மேசைக்கு உலக நாடுகளின் அனுசரணையுடன் அழைத்துள்ளது.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் கயல்விழி குறிப்பிட்டுள்ளார்.

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா இ.இராசேந்திரம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட கயல்விழி தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாம் கேட்காமலேயே எடுத்துக்கொள்ளப்போகின்ற நிலைமையிலேயே அரசு எம்முடன் பேச்சில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

உண்மையான விசுவாசத்துடன் இம் மண்ணில் சமாதானம் வேண்டும் என்ற அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு மேசையில் அமர்ந்துள்ளோம். மக்கள் மீண்டும் மீண்டும் துன்பத்திலும் கஷ்டத்திலும் நெருக்கடிக்குள்ளும் வாழ்வதை நாம் விரும்பவில்லை.

இதன் அடிப்படையிலேயே உளத் தூய்மையுடன் இன்றைய பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றோம். உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பேச்சின்போது பெரும் பிரச்சினை எழும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கடந்த பேச்சுகளின்போது நல்லதொரு தீர்வை ஏற்படுத்தக்கூடியவகையில் உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

### தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில்

## உயர்தர மாணவர்களுக்கான அரசியல் கருத்தரங்கு நாளை

யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. (உயர்தர) மாணவர்களுக்கு சமகால அரசியல் தொடர்பான கருத்தமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 11மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர்கள் விரிவுரையாற்ற உள்ளனர். எனவே, யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட உயர்தர மாணவர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு பயன்பெற ஆவன செய்யுமாறு யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர். (ஒ)

### பளைப் பகுதிப் பாடசாலைகளில்

## தற்காலிக வகுப்பறைகூட இன்றி மரநிழலின்கீழ் கற்கும் மாணவர்

தென்மராட்சி,ஜன.23

தற்காலிகமாக வகுப்பறைகள் அமைப்பதில் தாமதமேற்படுவதால் மரநிழலின்கீழ் கல்வி கற்கும் அவலநிலை பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இயக்கச்சி அரசினர் தமிழ் பாடசாலை, கோவில்வயல் அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளுக்கு இன்னமும் தளபாடங்கள் வந்து சேராததால் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் நிலத்தில் பாய் விரித்து அமர்ந்தே தமது பணிகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் தலா தொண்ணூறு மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை அண்மையில் சொந்த இடத்தில் மீள இயங்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## மிருசுவில் படுகொலை வழக்கை யாழில் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.23

கடந்த 2000ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் 8பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணத்திற்கு மாற்றித் தருமாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெறவுள்ளது. இவ்வழக்கு விசாரணைக்கு வருகைதருமாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கும் இக்கொலையை நேரில் கண்ட சாட்சிக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும், தாம் கொழும்பு செல்வதாயின் தமக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனவும் -

இல்லாவிட்டால் இவ்வழக்கு விசாரணையை யாழ்ப்பாணத்திற்கு மாற்றித்தரவேண்டும் எனவும் - படுகொலை செய்யப்பட்டோரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

இப்படுகொலை வழக்கு முன்னர் பருத்தித்துறையில் இயங்கிவந்த சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றுப் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

### நாளை

தை 13
வெள்ளிக்கிழமை
(24.01.2003)
திதி : ஷஷ்டி
காலை 7.29 வரை.
ஸப்தமி
பின் இரவு 5.10 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல் 10.13 வரை.
சுபநேரம் : 6.36 - 8.06
ராகுகாலம் : 11.06 - 12.36
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பொருளாசை உள்ளவர் நண்பர்களைப் பெறமாட்டார்கள்.

## சாவகச்சேரி டச்சு வீதியிலிருந்து படையினர் வெளியேறிச் சென்றனர்

சாவகச்சேரி டச்சு வீதியில் கடந்த ஒரு வருடங்களாக காவலரண் அமைத்து நிலைகொண்டிருந்த படையினர் [illegible] ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து வெளியேறி தபாற்கந்தோர் வீதியில் உள்ள முகாமுடன் இணைந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

டச்சு வீதி, இராமலிங்கம் வீதி, ஹென்ஸ்மன் வீதி ஆகிய வீதிகள் சந்திக்குமிடத்தில் 1996ஆம் ஆண்டுமுதல் காவலரண் அமைத்த படையினர், அங்கிருந்த முஸ்லிம் குடும்பங்களின் வீடுகளில் தங்கியிருந்தனர். முஸ்லிம் குடும்பங்கள் [illegible] குடியமர்வதற்காகவே இவ்விடத்திலிருந்து படையினர் வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## காணாமற்போனோர் குறித்த விசாரணைக்கு பொலீஸ் அழைப்பு!

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்காகச் சிலரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனவர்கள் மற்றும் அவர்கள் தொடர்பாக அழைக்கப்பட்ட சாட்சிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:-

அந்தோனிப்பிள்ளை திலகரத்தினம் (நாவற்குழி தெற்கு). சாட்சிகள்: பி.செல்லத்துரை, கெ.கமலரத்தினம், ஆர்.கண்ணதாஸன், கே. கமலக்கண்ணன்.

தாமோதரம்பிள்ளை உதயகுமார் (மீசாலை கிழக்கு) சாட்சிகள் க.செந்தீபன், விமலா ரோஷினி, ச.புவனேந்திரன்.

கந்தசாமி - புஸ்பலதா (மண்டாவில் மேற்கு, கொடிகாமம்) சாட்சிகள்: சின்னத்தம்பி, கனகம்மா.

சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் (கண்டி வீதி, கைதடி) சாட்சிகள் துர்மராசா முதலாளி, செல்வம்.

ஐயம்தம்பி உதயகுமார் (மீசாலை மேற்கு, சாவகச்சேரி) சாட்சிகள்: ஐயம்தம்பி, தெய்வானைப்பிள்ளை.

கணேஸா ஸ்ரீராம்சர்மா (கைதடி வடக்கு, கைதடி) சாட்சிகள் சகுந்தலாதேவி, ஐயாத்துரை.

துரைராஜா பாலச்சந்திரன் (பண்டாரக்குளம், நல்லூர்) சாட்சிகள்: து.ஜெயராசா, க.கந்தையா. (ஒ-5)

## கச்சாய் - அல்லாரை குறுக்கு வீதி விரைவில் மக்கள் பாவனைக்கு!

### படைத்தரப்பு வாக்குறுதி

கச்சாய் வீதியில் இருந்து அல்லாரை நிதி வாசிகசாலைக்குச் செல்லும் குறுக்கு வீதி ஒரு மாத காலத்திற்குள் பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிடப்படும் என்று படையினர் வாக்குறுதி அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை பகல் அல்லாரை தெற்கு மக்கள் மேற்படி வீதியைத் திறந்துவிடுமாறு கோரி அல்லாரை தம்புதோட்டம் இராணுவ முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கே தம்புதோட்ட இராணுவப் பொறுப்பதிகாரி இந்த வாக்குறுதியை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் கச்சாய் வீதியைத் திறந்துவிடக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றனரா? அப்போது நாங்கள் கச்சாய் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிட்டோம். இந்த வீதி இராணுவத்தினர் பாவனையில் இருந்ததால் மிதிவெடி அச்சம் இருக்கவில்லை. ஆனால், கச்சாய் வீதியிலிருந்து அல்லாரை நிதி வாசிகசாலைக்குச் செல்லும் வீதியில் பாதுகாப்பு மண் அரண் அமைக்கப்பட்டுள்ளது. மிதிவெடி அச்சமும் உள்ளது.

எனவே, ஒரு மாதகாலத்திற்குள் அரண்கள் அகற்றப்பட்டு இராணுவத்தினரால் மிதிவெடிகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் விரைவில் மேற்படி வீதி மக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படும் என இவ்வாறு படைத்தரப்பினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, ஆர்ப்பாட்டத்தைப் பொதுமக்கள் கைவிட்டனர். (ஒ-74)

### தெரிவுசெய்யப்பட்டவர்களில்

## தமிழீழ மீட்பு நிதிக் கடனை மீளப்பெறாதோருக்கு!

தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளளிப்பதற்காக 1990ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டுவரை குலுக்கல்மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் [illegible] தமது கடனை மீளப்பெறாதோருக்கு அ[illegible] நாள்களை நிதித்துறையினர் அறிவித்துள்ளன[illegible]

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி 14ஆம் திகதி முற்பகல் 10 மணிமுதல் 10.30 மணிவரை புளியங்கு[illegible] செயலகத்திலும், அன்று பிற்பகல் 3 [illegible] கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், [illegible] காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி[illegible] கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் [illegible] வழங்கப்படுமென நிதித்துறையினர் அறிவித்[illegible]. (ஒ)

## ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 04 - 1928



உதிர்வு 14 - 01 - 2001

### திருமதி நாகலிங்கம் சரஸ்வதி

திதி: 23-01.2003

*அன்பின் சிகரமே! அமைதியின் இருப்பிடமே!*
*பாசத்தின் பிறப்பிடமே! நேசத்தின் உறைவிடமே!*
*நீங்கள் எமைப் பிரிந்து ஈராண்டுகள் சென்றாலும்*
*ஆறாது எம்துயரம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பொன்னாலை தெற்கு,*
*சுழிபுரம்.*

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13566)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 - 06 - 1944



உதிர்வு 24 - 12 - 2002

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது சுன்னாகத்தில் வசித்தவராகிய

### திருமதி சுகிர்தாதேவி துஷ்யந்தன்

**எம்மையெல்லாம் வாழ வைத்து வழிகாட்டிய- எம் அன்புத் தெய்வமே! எங்களைவிட்டுப் பிரிந்து மாதம் ஒன்றாகிவிட்டது! ஆனாலும் உங்கள் அன்பின் நினைவுகள் எங்கள் உள்ளத்தை விட்டு அகலவில்லை அம்மா! - உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும் அம்மா!**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*குகதாஸ்,*
*ஊரெழு வடக்கு, சுன்னாகம்.* (13476)

-குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டினில்...
## நெஞ்சம் சுமக்கும் நினைவலைகள்

தாயின் மடியில் 24 - 11 - 1942



இறைவன் அடியில் 06 - 02 - 1999

அமரர் சிவஸ்ரீ

### சோமஸ்கந்தக்குருக்கள் விஜயரட்ணக் குருக்கள்

(முன்னாள் பிரதம குரு, புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம் உபதலைவர், அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபை)

திதி: 23-01-2003

*ஆண்டுகள் நான்கு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன, ஐயா என்றழைக்க நீங்கள் இல்லையே!*
*நீங்கள் இருந்த இடமெல்லாம் உங்கள் விம்பந்தான் தெரிகிறது ஐயா!*
*மீண்டொருகால் வந்து அன்புமொழி கூறமாட்டீர்களா?*
*ஆண்டுகள் நான்கென்ன யுகம் நான்கு சென்றாலும்*
*உங்கள் பாதையிலே செல்வோம் ஐயா!*
*பரமன் அருள் பெற்ற நும்மாத்மா சாந்திபெற*
*புற்றளை சித்தி விநாயகர் பாதக்கமலங்கள் பற்றி*
*நிற்கின்றோம் ஐயாவே!*

கஜானன் தொலைத்தொடர்பு சேவை
கீதா கோட்டம்,
புற்றளைப் பிள்ளையார் கோவிலடி,
புலோலி தெற்கு, புலோலி.
T.P. 070-212555/0777-564821
021-2263112
E.mail ananth 09@sitnet.lk (13565)

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
தாய்: சிவபாக்கியம்,
மனைவி: சந்திரகுமாரி,
மக்கள்: கீதா, பத்மபபிதா, ஆனந், பிரியா,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சந்நிதியான் ஆசிரம வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஜன.23

தொண்டமனாறு சந்நிதியான் சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் ஆசிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் "பகவத்கீதை" சொற்பொழிவு நிகழ்த்துவார். இதன் அறிமுக வுரையை தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலய ஆசிரியர் கி.இராசதுரை நிகழ்த்துவார். (ஒ-135)

### தொழில் முயற்சி கடன் உதவி

சண்டிலிப்பாய்,ஜன.23

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மல்லாகம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு சங்க உறுப்பினர்களுக்கு கால்நடை வளர்ப்புக்காக தலா 10 ஆயிரம்-ரூபா சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்படவுள்ளது. (ஒ-135)

### கடற்றொழிலாளர் கோரிக்கை

மாதகல் கடற்பரப்பில் இந்திய மீன்பிடி இழுவைக் கப்பல்கள் ஊடுருவி மீன் பிடித்து வருவதாகவும்- இதனால் மாதகல் பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் - மாதகல் மற்றும் கீரிமலை கடல் பிரதேசத்தில் அடிக்கடி இந்திய மீன்பிடிக் கப்பல்கள் ஊடுருவி தொழிலில் ஈடுபட்டுவருவதைத் தடுத்துநிறுத்தவேண்டுமென இப்பகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றிணைந்து பொன்னாலையிலுள்ள கடற்படைமுகாம் பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ-135)

### அச்சுவேலியில் மருத்துவ முகாம்

வலி.கிழக்கு,ஜன.23

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகமும் உரும்பிராய் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் அச்சுவேலி மத்திய கல்லூரியில் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மாலை ஒருமணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் வைத்திய பரிசோதனைகளும் கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கலும் இடம்பெறும். (ஒ-180)

### குருகுலத்துக்கு தொலைக்காட்சி அன்பளிப்பு!

வலி.தெற்கு,ஜன.23

யாழ்ப்பாணம் வேதாகம குருகுல கலாசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்கென தொலைக்காட்சிப் பெட்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

குருகுல கலாசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்ட ஜனாப் பௌசி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாக இதனை வழங்கினர்.

குருகுல மாணவர்கள் பயில்வதற்குத் தேவையான ஐந்து கணனிகள் அமைச்சர் தி.மகேஸ்வரனால் வழங்கப்பட்டன. (ஒ-152)


### தேவை

தையல் அனுபவம் உள்ள மெசினில் பூப்போடத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
றொசானி காமன்ஸ்,
261/1, இராஜகாரியர் வீதி,
மானிப்பாய்.
★ திறமைக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.
(13497)

### தேவை

பில் கிளார்க் (Bill Clerk) மூவர் தேவை.
(பெண்கள் மட்டும்)
26.01.2003இற்கு முன்னர் நேரில் வரவும்.
சன்லைட் றைக்கிளீனர்ஸ்
23, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம். (13536)


## பிறந்தநாள் வாழ்த்து



நாதன் - சுகந்தி தம்பதிகளின் மகன்

### USHANTH (யுசாந்)

இன்று தனது முதலாவது பிறந்தநாளை (23.01.2003) லண்டனில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரது அப்பா, அம்மா மற்றும் அன்பு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் யுசாந்தை பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அன்பு அப்பம்மா *(கனடா)*

Previous Address:
*Mrs. N.Sivayogam,*
*Railway Lane,*
*Kachchai Road,*
*Chavakachcheri,*
*Sri Lanka.* (13513)

Present Add.:
*Mrs. N.Sivayogam,*
*Toronto (Ont.),*
*Canada.*

## முதலாம் மாத நினைவு கூரல்



### திருமதி சோதிப்பிள்ளை நடராஜா

(உரும்பராய்)

தோற்றம்: 01.11.1921 மறைவு: 23.12.2002

கடந்து ஐந்து வருடங்களாக எங்கள் பராமரிப்பில் இருந்து இறைபதமடைந்த திருமதி சோதிப்பிள்ளை நடராஜாவின் ஒரு மாத பூர்த்திநாளான இன்று (23.01.2003) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கொழும்புத்துறை புனித ஜோசப் வயோதிபர் இல்லத்தில் நினைவு ஆராதனை நடைபெறும் என்பதைத் தெரியப்படுத்துகிறோம்.

அருட்சகோதரிகள்,
புனித ஜோசப் வயோதிபர் இல்லம், கொழும்புத்துறை.
(C/26168)

## மரண அறிவித்தல்

திருமதி

### குலசேகரம் நாகம்மா (கொடிகாமம்)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசேகரம் நாகம்மா 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்தார் குலசேகரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் திருமதி சுகுணசோதி சின்னையா (இளைப்பாறிய ஆசிரியை), சிறீஸ்கந்தராசா (கனடா), திருமதி சிறீரஞ்சினிதேவி இராமநாதன், சிறீகாந்தன் (சுவிஸ்), சிறீதரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற திருமதி சின்னத்துரை இராசம்மா, திருமதி ஏகாம்பரம் ஞானம்மா, திருமதி திருநாவுக்கரசு நேசம்மா (இளைப்பாறிய ஆசிரியை), ஆறுமுகம் தேவதாசன் (இளைப்பாறிய டாக்டர்) ஆகியோரின் சகோதரியும் ஐ.சின்னையா (இளைப்பாறிய அதிபர்), த.இராமநாதன் (பயனியர்மில், கொடிகாமம்), திருமதி சி.அகிலேஸ்வரி (கனடா), திருமதி சா.கோமதி (சுவிஸ்), திருமதி சி.ஆனந்தி (ஆஸ்திரேலியா), திருமதி சஜீவனி மனோஜ்குமார், செல்வி தே.அபிராமி ஆகியோரின் மாமியும், திருமதி முருகேசு கமலாதேவியின் சிறிய தாயாரும் திருமதி ஸ்ரீரங்கன் சிவகலை (ஆசிரியை), திருமதி லோகேந்திரன் தேவகலை (ஆசிரியை), தி.துஷ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாரும் திருமதி கலையரசி குகராஜ்(நோர்வே), திருமதி சுமதி குகதாசன் (பல்வைத்தியர், நீர்கொழும்பு), திருமதி கலைமதி பத்மநாதன் (ஜேர்மனி),நிரஞ்சன்(லண்டன்), திருமதி சர்மிளா குகேந்திரன் (லண்டன்) செந்தூரன், நிருபா, சங்கீதா, நிருஷன், சுரேன், சுரேகா (கனடா), ஆரோன் (சுவிஸ்), நகுலன், விதுஷன், விபுலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் அஞ்சலிஅபிராமி (நோர்வே), அர்ச்சனா, அனந்தி (நீர்கொழும்பு), பவித்திரா, பிரசாத் (ஜேர்மனி), திலக்ஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கண்டி வீதி, கொடிகாமத்திலுள்ள மருமகன் இல்லத்தில் இன்று (23.01.2003) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப.1மணியளவில் கொடிகாமம் வேவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்டி வீதி,*
*கொடிகாமம்.* (13554)

தகவல்:
த. இராமநாதன் *(மருமகன்)*
*(பயனியர் மில், கொடிகாமம்)*

# தென்னாபிரிக்காவில் சமாதானத்தை எட்ட வழிவகுத்த சமஷ்டி அரசமைப்பு முறை

**தற்போது நாட்டில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணும் விடயத்தில் சமஷ்டி அரசியல் முறை குறித்து ஆராயப்படுகிறது. இனவாதம் தலைவிரித்தாடிய தென்னாபிரிக்காவில் சமாதானத்தை உருவாக்க சமஷ்டி அரசியல்முறை எவ்வாறு வழிவகுத்தது என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. நிகோ ஸ்டேட்லர் மற்றும் ஜொஹான் மேட்லர் ஆகியோரால் எழுதப்பட்டு சிங்களத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தென்னாபிரிக்காவில் தேசிய காங்கிரஸ் மீது விதிக்கப்பட்ட தடை 02.02.1990 அன்று நீக்கப்பட்டதும், இரு தரப்பினருக்கும் இடையே நிலவிய பகைமையுணர்வைப் போக்கும் உடன்பாடு 1991 ஜுன் மாதத்தில் கைச்சாத்தானதும், அந்நாட்டில் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வழி அமைத்தன. இதனைத் தொடர்ந்து அரசமைப்புத் தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களின்போது முன்வைக்கப்பட்ட மிகவும் முக்கியமான தீர்வு சமஷ்டி அமைப்பு முறையாகும்.

பல ஆண்டுகளாக ஒருங்கிணைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு ஆட்சி நடத்திய தேசியக் கட்சியானது தீர்வாக சமஷ்டி அமைப்பு முறையை முன்வைத்தபோது அது குறித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வேறு கோணத்தில் சிந்தித்தது. அதாவது, பெரும்பான்மையினரான கறுப்பு மக்களின் நிர்வாகத்தைப் பலவீனப்படுத்துவதற்காக வெள்ளையர்களால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வே சமஷ்டி அமைப்பு முறையெனச் சிந்தித்தது.

அதன்படி ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பிரதேச சுயாட்சி உரிமையை உறுதிப்படுத்தும் கொள்கையினைக் கொண்ட அமைப்பாக மாறியது. சமஷ்டி அலகுகளை உருவாக்குவது என்பது நிறபேதத்துடன் கூடிய தாயகத்தைச் சட்டபூர்வமாக்குவது எனவும் வெள்ளையர்களுக்கென தனியானதோர் அரசை உருவாக்கும் தந்திரம் எனவும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் நினைத்தது. எனவே, தென்னாபிரிக்க சமூகத்தின் அடிப்படைப் புனரமைப்புக்கு வழிவகுக்கும் விதத்தில் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது என ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தீர்மானித்தது.

இவ்வேளையில், வெள்ளையர்களின் தேசியக் கட்சி புதிய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. அதாவது, ஆபிரிக்கர்கள் அல்லாதோர் (வெள்ளையர்கள்) பெரும்பான்மையினராக வாழும் மேற்குக் கேப் மற்றும் வடக்குக் கேப் ஆகிய இரு மாநிலங்கள் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் பூகோள அடிப்படையில் இன விகிதாசாரத்தின்படி மாநிலங்களை அமைப்பது எனவும், பன்முகப்படுத்தப்பட்ட அதிகார அலகுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புகளைக் கொண்டிருக்காது என்பதுமே தேசியக் கட்சியின் கருத்தாக இருந்தது. அதுமாத்திரமன்றி பன்முகப்படுத்தப்படும் அதிகார அலகுகள் மத்திய அரசை பலவீனப்படுத்திவிடும் என்றும் தேசியக்கட்சி கருதியது. தேசிய அரசே (மத்திய அரசு) அதிகாரங்களின் மையம் என்ற கருத்தைக் கொண்ட தேசியக்கட்சி, அதனடிப்படையிலேயே அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்தது. ஜனநாயகத் தென்னாபிரிக்கா தொடர்பாக நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் போதும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போதும், இந்த இரு தரப்பினருக்கும் பிரச்சினையாக இருந்த முக்கியமான விடயம் தேசிய நிறைவேற்று அதிகாரங்களை நிர்வகிக்கும் விடயமாகும். பேச்சுக்களின் வெற்றி மாகாணங்களை மீள அமைப்பதும், அவற்றுக்கு அளிக்கப்படும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் வரையறையை மேற்கொள்வதிலும் தங்கியிருக்கவில்லை. பதிலாக ஒரு தேசிய அரசை அமைப்பதிலேயே தங்கியிருந்தது. தேசியக் கட்சியானது அவ்வேளையில் தன்னாட்சி உரிமையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. பதிலாக ஏற்கனவே பிரிக்கப்பட்ட நிர்வாக அமைப்பிலேயே நம்பிக்கை கொண்டிருந்தது.

1993 டிசெம்பர் 2ஆம் திகதி கேமடன் பூங்காவில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுக்கும் தேசியக் கட்சிக்குமிடையே இறுதி அரசியற்தீர்வு மேற்கொள்ளப்பட்ட வேளையிலும் இடைக்கால நிர்வாக அமைப்பாக முத்தரப்பினரைக் கொண்ட நாடாளுமன்றம் அமைக்கப்பட்டபோதும் இரு முக்கிய குழுக்களான வலதுசாரி ஆபிரிக்கக் குழுவினரும் இனவாத சிறுபான்மைக் குழுவினரும் பங்குபற்றவில்லை. அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பாக இந்த இரு குழுக்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. 27.04.1994 அன்று நடைபெற்ற தேர்தல் நெருங்கிய வேளையில் பல்வேறு மோதல்கள் இடம்பெற்றன. வன்முறைகள் மூலம் தேர்தலை நிறுத்தும் ஆற்றல் தமக்குள்ளது என அந்த இரு குழுக்களும் நம்பின.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸும் தேசியக் கட்சியும் 1993 ஜுன் மாதத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தேர்தல் நடத்துவதற்கான நாளைத் தீர்மானித்தவேளையில், மாநாட்டில் கலந்துகொள்ளவந்த பல முக்கிய குழுக்கள் பேச்சுக்களிலிருந்து வெளிநடப்புச் செய்தன. மங்கொசுது பிறதெலிசியின் தலைமையிலான இன்காதா சுதந்திரக்கட்சி, கொன்சர்வேடிவ் கட்சி மற்றும் ஜெனரல் கொன்ஸ்டன்ட் வில்ஜோனின் தலைமையிலான ஆபிரிக்க வோக்கிஸ் முன்னணி ஆகிய குழுக்கள் பேச்சுக்களைவிட்டு வெளியேறின.

பின்னர் இந்தக் கட்சிகள் (குழுக்கள்) "சுதந்திரக் கூட்டமைப்பு" என்ற பெயரில் பலவீனமான ஓர் அமைப்பை உருவாக்கின. அவர்களது கோரிக்கைகளில் முக்கியமானது தேர்தலுக்கான நாள் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் அரசமைப்பை உருவாக்கும் பணிகள் பூரணமாக்கப்பட வேண்டும், அரசமைப்பு ரீதியாக ஜனநாயக ஆட்சியமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதாகும்.

வலதுசாரி வெள்ளையர்கள் நடைமுறையிலிருந்த ஆட்சி முறையையே ஆதரித்தனர். இன்காதா சுதந்திரக் கட்சி பரவலான பிரதேச சுயாட்சியை ஆதரித்தது. பலரும் பலவிதத்தில் குரல் எழுப்பினர். மாநில (மாகாண) நிர்வாக அமைப்புக்கென தனியான தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் நேதால் மாநிலத்தின் பெயரை க்வாசுலு நேதால் என மாற்ற வேண்டும் எனவும் இன்காதா சுதந்திரக் கட்சி வன்மையாக வலியுறுத்தியது.

மாநிலங்களுக்கு பரந்த அளவில் அதிகாரங்களைப் பரவலாக்குவது எனப் பொதுக் கருத்து வலுப்பெற்று இருந்ததால் இன்காதா சுதந்திரக் கட்சி பேச்சுக்களில் இருந்து வெளியேறியது எதிர்பாராத நிகழ்வாக அமைந்தது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸும் தேசிய கட்சியும் தனக்குத் தக்க மரியாதை வழங்கி சமமான இடத்தில் வைக்கவில்லை என்பதே இன்காதா சுதந்திரக் கட்சித் தலைவரின் கவலையாகும்.

சர்வகட்சி மாநாடு டிசெம்பர் 2 ஆம் திகதி கூடி, இடைக்கால அரசமைப்பை ஏற்றுக்கொண்டதுடன் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கத்தின்படி இரு ஆண்டுகளுக்குள் முடிவான அரசமைப்பு தயாரிக்கப்பட வேண்டும் எனவும், அரசமைப்புக் குழுவை நியமிக்கும் நிபந்தனையும் அந்த மாநாட்டுத் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இன்காதா சுதந்திரக்கட்சியும் ஆபிரிக்க வோக்ஸ் முன்னணியும் இந்த நிபந்தனையை நிராகரித்தன. 27.04.1994 இல் நடைபெறவிருந்த தேர்தலிலும் பங்குபற்றுவதில்லை என இந்த இரு கட்சிகளும் தீர்மானித்தன. தேர்தலின் பின்னரே இடைக்கால அரசமைப்பைச் செயற்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சுதந்திரக் கூட்டமைப்பினர் வன்முறைகளையே விரும்பினர். உள்நாட்டு யுத்தம் பற்றி ஆபிரிக்க வோக்ஸ் முன்னணியினர் சிந்திக்க ஆரம்பித்தனர். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இன்காதா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் க்வாசுலு நேதால் மற்றும றப் ஆகிய பிரதேசங்களில் பகிரங்கமாக மோதல்கள் இடம்பெற்றன. தேசிய அளவில் இரத்த ஆறு ஓடுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும், தேர்தல் உட்பட எந்தவோர் அரசியல் நடவடிக்கைகளையும் குழப்பும் ஆற்றல் தமக்குள்ளது என இன்காதா சுதந்திரக் கட்சி நினைத்தது. இதுவே வன்முறைகள் பரவலாக இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

ஆபிரிக்க வோக்ஸ் முன்னணி, கொன்சர்வேடிவ் கட்சி, ஆபிரிக்க வியர்ஸ்டானட்பெவிஜிங் ஆகியனவற்றிற்கும் இவற்றைவிட முக்கியமான ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல்களும் இணைந்த வலதுசாரி வெள்ளையர் கூட்டமைப்பிடம் அதிக ஆற்றல் இருந்தது மட்டுமன்றி, ஆபிரிக்கர்களென அடையாளம் காணப்படும் ஆயுதப் படைகளுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் அளவிற்கு அந்தக் கூட்டமைப்பு இருந்தது. தொடர்ந்து இடம்பெற்ற இரத்தக் களரிகள் காரணமாக சமாதான முயற்சிகள்மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை பலவீனமடையத் தொடங்கியது. சமாதான முயற்சிகளை முற்றாகக் குழப்பும் அளவிற்கு வன்முறைகள் இடம்பெறாவிடினும் சமாதானம் தொடர்பான பொதுத்தேவையை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. ஜனநாயகத்தை நோக்கி வெற்றிகரமாக நடைபோட வேண்டுமாயின் முக்கியமான ஒரேயொரு மாற்றுவழி தேர்தலே என்பது தெளிவாகியது.

இது தொடர்பான முதல் நடவடிக்கை 1993 அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட திருத்தமாகும். 1994 மார்ச் மாதத்தில் அது நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தேசியகட்சி மற்றும் சுயேச்சைக் கூட்டமைப்பு ஆகியவற்றிக்கிடையில் உரிய திட்டமின்றிப் பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றன. இதில் முதல் இரு கட்சிகளும் மூன்றாவது கட்சியின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டன.

தேர்தலில் பங்குபற்றுவது தொடர்பாக ஏனைய கட்சிகளின் கருத்துக்களை, நோக்கங்களைக் கேட்டறியாத ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸும் தேசிய கட்சியும் சுயேச்சைக் கூட்டமைப்பைச் சேர்ந்த கொன்சர்வேடிவ்

**தமிழில்: கஜனி**

மற்றும் இன்காதா சுதந்திரக் கட்சி ஆகிய முத்தரப்பினர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அரசமைப்புக்கான உத்தேசத் திருத்தங்கள் குறித்து அக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்தன.

1994 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்படவிருந்த அரசமைப்புக்கான திருத்தத்தில் பல்வேறுவகையான சமஷ்டி முறைகள் எதிர்பார்க்கப்பட்டன. இன்காதா சுதந்திரக்கட்சி கீழ்க்கண்ட திருத்தத்தை முன்வைத்தது.

"நேதால் என்பது க்வாசுலு நேதால் என மாற்றப்படவேண்டும். பிராந்தியத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டும். பிராந்திய நிர்வாக அமைப்பிடம் கையளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அந்த அமைப்பால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் தேசிய நாடாளுமன்றத்தால் அதே விடயங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களைவிட மேலோங்கியவையாக இருத்தல் வேண்டும். பிராந்திய நிர்வாக அமைப்பிடம் உள்ள வரி அறவிடும் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டும். அதன்மூலம் பிராந்தியங்களுக்கு நிதியும் சுதந்திர நிதிநிர்வாகமும் கிடைக்க வேண்டும்" என்பனவே இன்காதா சுதந்திரக்கட்சி முன்வைத்த திருத்தங்களாகும்.

தங்களது பிராந்தியத்திற்கான அரசமைப்பைத் தயாரிக்கவும் அதை நிறைவேற்றவும் பிராந்திய நிர்வாக அமைப்புக்களுக்கு விரிவான அதிகாரங்கள் கிடைக்கவேண்டும். பிராந்திய நிர்வாக அமைப்பிற்கும் தேசிய நாடாளுமன்றத்திற்குமென வெவ்வேறான வாக்குரிமைகளைப் பயன்படுத்தும் உரிமை மக்களுக்கு வழங்கப்படவேண்டும். பிராந்திய நிர்வாக அமைப்புக்களின் அதிகாரங்கள் தேசிய அரசின் இறுதியான அரசமைப்பினால் பாதிப்படையக்கூடாது. இந்த இறுதித் திருத்தங்கள் அரசமைப்பின் 18ஆவது திருத்தங்களாக முன்வைக்கப்பட்டன.

சுயநிர்ணய உரிமை தொடர்பாக வலதுசாரி குழுவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அது தொடர்பான விஷேட விதிகள் உத்தேச அரசமைப்பு வரைவில் உள்ளடக்கப்பட்டன. மேற்கொண்டு பேச்சுக்களை மேற்கொள்ளும் நோக்கில் வொக்சாத் சபையை உருவாக்குவது தொடர்பான விதிகளும் அரசமைப்பு வரைவில் சேர்க்கப்பட்டன. பொதுவான கலாசாரம் மற்றும் பொதுவான மொழி ஆகியனவற்றை கொண்ட மக்களுக்கு சுயநிர்ணய



நெல்சன் மண்டேலா

உரிமையை வழங்குவது தொடர்பான விதிகளும் அரசமைப்பு வரைவில் சேர்க்கப்பட்டன.

இருப்பினும், வொக்சாத் சபையை உருவாக்குவதற்கு இவை போதுமானவை அல்ல எனத் தெரிவித்த கொன்சர்வேடிவ் கட்சி அதனை எதிர்த்தது. அக் கட்சியினர் தங்களது நிலப்பரப்பில் தாங்களாகவே அரசமைப்பை உருவாக்கி தாங்களாகவே அரசு ஒன்றை அமைக்கவிரும்பினர்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்யும் இறுதிநாள் நெருங்கும் வேளையில் ஜெனரல் வில்ஜன் ஆபிரிக்க வொக்சாத் முன்னணியிலிருந்து விலகி தேர்தலில் போட்டியிடுவதற்காக "சுதந்திர முன்னணி" என்ற பெயரில் அரசியல் கட்சியைப் பதிவுசெய்தார். தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்தார். வொக்சாத் சபையை அமைப்பது தொடர்பாக வலதுசாரிக் குழுவும் இவ்வாறான கருத்தையே கொண்டிருந்தது.

இருப்பினும், இன்காதா சுதந்திரக் கட்சி அதிலிருந்து விலகி க்வாசுலு நேதால் மற்றும் றீப் ஆகிய பிராந்தியங்களில் மீண்டும் வன்முறைகளில் ஈடுபட்டதால் க்வாசுலு நேதாலில் அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த நேர்ந்தது.

தேர்தலுக்கு இரண்டு நாள்கள் இருக்கையில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸும் தேசியக் கட்சியும் சர்வதேச அனுசரணையைக் கோரிய இன்காதா சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை ஏற்றன. இருப்பினும், அது வெற்றியளிக்காத நிலையில் இன்காதா சுதந்திரக் கட்சியின் க்வாசுலு அரசும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸும் தேசியக் கட்சியின் தென் ஆபிரிக்க அரசும் 19.04.1994 அன்று ஒற்றுமை உடன்பாட்டிற்கு வந்தன. அதன்படி இன்காதா சுதந்திரக்கட்சி தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்தது. ஏனைய அனைத்துக் கட்சிகளும் வன்முறைகளை நிராகரிப்பது எனவும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் தேர்தல் நடைபெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி, க்வாசுலு அரசின் அரசமைப்பையும் அதன் செயற்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கின. 1994 ஏப்ரல் 25ஆம் திகதி நடைமுறைக்கு வந்த அரசமைப்பு திருத்தச் சட்டம் ஒரு புறத்தில் அவ்வளவு முக்கியத்துவம் பெறாவிடினும் அந்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் ஒரு மைற்கல்லாக அமைந்தது. 1994 மார்ச் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட இந்த அரசமைப்பு திருத்தத்தின்படி தங்கள் விருப்பப்படி பிராந்தியங்களின் அரசமைப்பைத் தயாரிப்பதற்கும் தொடர்புடைய வேலைகளில் தொடர்புடைய பிராந்திய அரசுகளின் அதிகாரங்களைச் செயற்படுத்தும் வகையிலும் திருத்தச் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அதியுச்ச அளவில் சலுகைகள் வழங்கப்பட்ட போதிலும் புதெலிசி இதில் பங்குபற்றுவதெனத் தீர்மானித்தது ஏன் என்பது பற்றி சந்தேகம் எழுந்தது. எந்தவொரு பிராந்தியத்திலும் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கு அவருக்கு இல்லை. இருப்பினும் அவ்வேளையில் அவருக்குக் கிடைக்க வேண்டியவை கிடைத்தன. க்வாசுலு பிராந்தியத்தில் ஸ்வெலிதினியின் அரசு புதெலிசியின் மனதை மாற்றுவதில் முக்கிய பங்கேற்றிருக்கக்கூடும். தென்னாபிரிக்க அரசு கோத்திர பூமியை அரசரிடம் கையளித்த காரணத்தால் புதெலிசியின் மனம் மாறியிருக்கலாம். அரச குடும்பத்தில் ஒத்துழைப்புக் கிடைக்காததன் பின்னர் அவருக்கு மாற்றுவழிகள் வேறேதும் இருக்கவில்லை.

தேர்தலின் பின்னர் சுதந்திர முன்னணியும் இன்காதா சுதந்திரக் கட்சியும் இடைக்கால அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஷ்டி தொடர்பான வாக்குறுதியை பிரயோசனப்படுத்தும் முயற்சிகளில் இறங்கின. இருப்பினும் அவை ஒரே நோக்கில் செயற்படவில்லை.

வொக்சாத் சபை கூடி ஆபிரிக்கர்களின் தாயக நிலப்பரப்பைக் கண்டறியும் நடவடிக்கைகளை ஆரம்பித்த போதிலும் அரசமைப்பைத் தயாரிக்கும் சபை மேற்கொண்ட தீர்மானத்தால் அவை தோல்வியடைந்தன. ஆபிரிக்கர்கள் (கறுப்பு இன மக்கள்) பெரும்பான்மையினராக வாழும் இடம் எங்கும் இல்லை என அரசமைப்புத் தயாரிக்கும் சபை தெரிவித்த அறிவிப்பை வொக்சாத் சபை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது.

எனவே, சுயநிர்ணயம் தொடர்பான இலக்கு தீர்க்கமற்ற எதிர்காலத்துக்குத் தள்ளப்பட்டது. புதிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் அரசு மெதுவாக-ஆனால், உறுதியாக- ஆயுதப்படைகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால் வலதுசாரிகளின் செல்வாக்கு படிப்படியாகச் சரிந்தது.

க்வாசுலு நேதால் பிராந்தியம் தொடர்பாக சமஷ்டி அரசமைப்புத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பமாகின. இருப்பினும், அரசமைப்பு நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப்பட்டது. பிராந்திய அரசமைப்பானது தேசிய அரசமைப்பு விதிகளுக்கு ஏற்ப அமையாத காரணத்தாலேயே அது நிராகரிக்கப்பட்டது.

1995 மார்ச் மாதத்தில் இன்காதா சுதந்திரக்கட்சி அரசமைப்புத் தயாரிப்புச்சபையில் இருந்து விலகியது. சர்வதேச அனுசரணையின் தேவை குறித்து அந்தக் கட்சி விடுத்த கோரிக்கை நிறைவேற்றப்படாமையே அக்கட்சி விலகியதுக்குக் காரணமாகும். இருப்பினும், அவர்களது பிராந்திய அரசமைப்பு வரைவு அரசமைப்புத் தயாரிப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அது அவர்களது அமெரிக்க ஆலோசகர் மாரியோ ஆம்புரோசினியால் தயாரிக்கப்பட்டது. அது அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது போன்று அங்க சம்பூர்ண அரசமைப்பு வரைவாகும். தேசிய ஒற்றுமை அரசில் மூன்று அமைச்சர் பதவிகள் இன்காதா சுதந்திரக் கட்சிக்குக் கிடைக்க வாய்ப்பு இருந்தும் சுலு அரசனே க்வாசுலு நேதால் பிராந்தியத்திற்கு அரசனாக இருக்கவேண்டுமென அக்கட்சி விடுத்த கோரிக்கை பலன் தரவில்லை.

1996இல் அரசமைப்பு தயாரிப்பு முடிவுற்றது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த வரைவில் காணப்பட்ட சில விடயங்கள் மாற்றப்பட்டன. க்வாசுலு பிராந்தியத்தில் இடத்திற்கிடம் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. அது தொடர்பாக விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள நேர்ந்தது. இடைக்கால அரசமைப்புக்கும் இறுதி அரசமைப்புக்குமிடையே தெளிவான வித்தியாசங்கள் காணப்பட்டன. ஒரு சில பிராந்தியங்களுக்கு அதிக வாய்ப்பாக அமைந்த விடயங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஆனால் ஓரளவு இலகுவான சமஷ்டி இலட்சணங்களைக் கொண்டதாக இறுதி அரசமைப்பு அமைந்தது. ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு.

79-டீசல் ஓட்டோ (நீலநிறம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: P.பூச்சி, 'முருகபதி' உடுவில், சுன்னாகம் (டச ரோட்). (13481)

தரமான கொங்றீற் கற்கள், மணல், சல்லி என்பன பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 162, அரசடி வீதி, கந்தர்மடம் டாயனா கொமினிக்கேசன் அண்மையில் T.P.:3146 (13557)

கிளிநொச்சி Town இலிருந்து கோவிந்தன் கடைச் சந்திக்கிடையில முதலாவது மைல் அருகில் 2 ஏக்கா மேட்டு/வயல் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.இலக்ஸ்மன், C/o த.தர்மச்சந்திரன், அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு. (13488)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுகாதார முறைப்படி தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும் வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் ரெஸ்ரோறண்ட் முன்பாக). (13579)

## மாடி வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை V.M. வீதி சந்தியில் (வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) மாடிவீடு 'பிறேமா இல்லம்' விற்பனைக்குண்டு (தரகர் வேணடாம்). உடன் தொடர்பு கொள்ளவும். திருமதி ச.கிருஷ்ணபவான், 'பிறேமா இல்லம்', V.M.வீதி, பருத்தித்துறை. (13490)

## வீடு வாடகைக்கு

யாழ்.பருத்தித்துறை வீதியில் நீர்வேலி சந்திக்கண்மையில் சகல வசதிகளுடன் கூடிய 2000 சதுரஅடி விஸ்தீரணமுடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: வி.இலக்கம் 1755, மே/பா உதயன். (13537)

## தவறிவிட்டது

கொக்குவில் தேவாலய ஒழுங்கையைச் சேர்ந்த செல்வி துளசிதா தேவருள்ராஜா என்பவருடைய தே.அ.அ.(இல.817501931V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (13551)

புத்தகங்களும் சில உடுப்புகளும் அடங்கிய சந்திரிகா பையொன்று கோண்டாவில், சாவகச்சேரி போக்குவரத்துப் பாதையில் 20.01.2003 அன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.பரஞ்சோதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (13558)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள AKAI GX 39, AKAI GX 30 JVC, SANSUI ஓடியோ டெக்குகள் விற்பனைக்குண்டு.

**ஓடியன் மியூசிக் சென்ரர்**
264, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதலாம் அரையாண்டு பரீட்சைகள் கல்வியாண்டு - 2002/2003**

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பின்வரும் BAD/B.Com. அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவரிடமிருந்து 31.01.2003 திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. இரண்டாம் வருடம் பகுதி I
2. மூன்றாம் வருடம் பகுதி II
3. நான்காம் வருடம் பகுதி III

மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல்வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இன்று 23.01.2003 முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**பதிவாளர்.** (சி-25162)

# ரூ.50 கோடியில் குடிதண்ணீர்த் திட்டம்!

தென்மராட்சி,ஜன.23

சர்வதேச அபிவிருத்திக் கழகத்தினர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 50 கோடி ரூபா செலவில் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளனர். இதற்கென மாகாணத்தில் நான்கு மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசமும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி பிரதேசமும், அம்பாறை மாவட்டத்தில் மல்வத்தை பிரதேசமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைநிலாவணை பிரதேசமும் இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதியில் தென்மராட்சி பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத்திற்கென 150 மில்லியன் ரூபா ஒதுககப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண நீர் விநியோக பொறியியலாளர் சி.மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

(ஓ-117)

## COMPUTER OPERATER தேவை

கணனி இயக்குவதிலும் தமிழ், ஆங்கிலத்தில் ரைப் செய்வதிலும், நெற்போன் இயக்குவதிலும், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும் கூடிய அனுபவம் உள்ள மற்றும் Diploma, Degree சான்றிதழ்களை உடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு உங்களது விண்ணப்பங்களை மாசி 05ஆம் திகதிக்கு முன்பாக அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை
தலைமைச் செயலகம்,
(13572) பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகிறோம்



ஆசிரியர் சேவையில் 26 வருடங்கள் இசைத்துறைக்கும், மிருதங்கக் கலைக்கும் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் ஆசிரியமணி

செல்வி

**ஜெயமணி ஐயாத்துரை**

(இசை மிருதங்க டிப்ளோமா)

அவர்கள் மேலும் பல சிறப்புக்கள் பெற்றும் பல்லாண்டு வாழ கல்லூரிச் சமூகம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஆசிரியர் கழகம்
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

(13585)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## வருடாந்த
## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2003

இடம்: கல்லூரி மைதானம்
தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள் (அதிபர்)
காலம்: நாளை (24.01.2003) வெள்ளி மு.ப.9.00 மணி.

**கனிஷ்ட பிரிவு**

முதன்மை விருந்தினர்: திரு.அ.தற்பரானந்தன் அவர்கள்
(இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
சிறப்பு விருந்தினர்: திரு.பா.கிருபாகரன் அவர்கள்
(விளையாட்டு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

**சிரேஷ்ட பிரிவு**


காலம்: 25.01.2003 சனிக்கிழமை பி.ப.1.00 மணி
முதன்மை விருந்தினர்: திரு.க.பூரணச்சந்திரன் D.E.E.Eng.(Lon.) அவர்கள் (Chairman/Managing Director Star Industrial Service (PVT) Ltd.)
சிறப்பு விருந்தினர்கள்: திரு.கா.சந்திரபாலன் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
திரு.சி.இளம்பரிதி அவர்கள்
(அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)
பரிசில் வழங்குநர்: திருமதி சோதிலக்ஷ்மி பூரணச்சந்திரன் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(13586) மாணவர்கள், ஊழியர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1932 - 08 - 15



மறைவு 2001 - 01 - 14

**அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
திதி: 23.01.2003 சஷ்டி

எம் வாழ்வு வசந்தம் வீச
எங்களுக்காய் வாழ்ந்த அப்பாவே!
இரண்டு ஆண்டுகளும் போய்விட்டது
நம் துயர் துடைக்க இனி ஒரு
பிறவி எடுக்க மாட்டீர்களா?

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (13581)

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# ஜே.கே. அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற, பெறுமதிக்கு பொருத்தமான ஜே.கே. அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

**ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்**
316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 12.
போன்: 345046, 327264, 343822, 430799
(சி-24331) பக்ஸ்: 434637

TALENT

## கண்ணீர் அஞ்சலி



19.01.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்த

**முத்துலிங்கம் தேவபாலன்**
(பாலன்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

ஐயா கடையடி,
மீசாலை. (13578) உறவினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## முத்துலிங்கம் தேவபாலன்

(ஜனனி ஸ்ருடியோ - சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு, ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் தேவபாலன் 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் முத்துலிங்கம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் நிர்நாளினியின் பாசமிகு கணவரும் சர்நாளன், அருளினி, வகிர்தா, ரேசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன் (கனடா), மனோகரன (கனடா), மகேஸ்வரன் (சாவகச்சேரி நகரசபை), மனோரஞ்சினி (கனடா) சுகதாஸ் (கனடா), ஜெகதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும கணேசலிங்கம் - அன்னலட்சுமி (அல்லாரை) தம்பதிகளின் அன்பு மருமகனும் மீனலோஜினி (கொலண்ட்), பார்த்தீபன் (கொலண்ட்), இளந்திரையன் (நோர்வே), இளங்குமரன் (கொலண்ட்), துஷ்யந்தினி (ஜேர்மனி), சாந்தநாயகி, சந்திரவதனா, நவரஞ்சிதம் விஜயரட்ணம் (கனடா) இரஞ்சிதமலர், பக்சலாதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற திருமதி அன்னம்மா நாகராசா (குணம்) என்பவரின் மருமகனும் கு.வி.மகாலிங்கம், வி.எம்.சுந்தரலிங்கம் ஆகியோரின் பேறாமகனும் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மருமகனும் ஏ.கே.சோமசுந்தரம் (இளைப்பாறிய தபால் அதிபர்) என்பவரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயா கடையடி,
மீசாலை. (13577)

தகவல்:
முத்துலிங்கம் (தகப்பன்)
தே.நிர்நாளினி (மனைவி)

## தில்லையர் மயில்வாகனம் (மயிலேறி)

(முன்னாள் சாரதி, சீமெந்துத் தொழிற்சாலை)

காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது தியேட்டர் லேன், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையர் மயில்வாகனம் (மயிலேறி) 22.01.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையர் - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் முத்தம்மாவின் அன்புக் கணவரும் மகாலிங்கம் (சீமெந்து தொழிற்சாலை, I.C.R.C. பாதுகாப்பு உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் செல்லராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பரமேஸ்வரி, சாந்தலக்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெயகௌரி, சுபர்ணன் (ஜேர்மனி), ஜெயவாணி, மீரா, நிசாந்தி, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை (இணுவில்) இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி:
வீடியோ சூர்யா,
தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
ம.மகாலிங்கம்
இ.விஜேய் (பேரன்)
(13582)

## திருமதி பாக்கியம் கந்தசாமி

(இலகடி, கோப்பாய் வடக்கு)

காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து அவர்களின் மகளும் பொன்னம்பலம் - தங்கம் ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற பொ.கந்தசாமியின் மனைவியுமான திருமதி பாக்கியம் கந்தசாமி காலமானார்.

அன்னார் அமரர் செல்லம், அமரர் இராசையா ஆகியோரின் சகோதரியும் திருமதி சரோஜினிதேவி, செல்வராசா (பிரான்ஸ்), மகிழ்ராயன், திருமதி சகுந்தலாதேவி (பிரான்ஸ்), திருமதி சாரதாதேவி, திருமதி சுசிலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் சிவகுரு (EX C.T.B. OFFICER), மகாலிங்கம் (பிரான்ஸ்), இலங்கநாதன், வாகீசன் (பிரான்ஸ்), திருமதி வசந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் பிரதீப்ராஜ் (அவுஸ்திரேலியா), தனுசியா, அனுசியா (பிரான்ஸ்), சுகிர்தா, கிரிசாந்தன், கிரி, சோபி, பிரசன்னா (பிரான்ஸ்), உதயகுமார், ராஜ்குமார், அனுசா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.01.2003) வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
சி.இலங்கநாதன் (மருமகன்)
(13584)

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் முடிய)

உதவும் மனத்தாலும், உழைக்கும் கரத்தாலும் உயர்ந்த நிலையை அடையும் தனுசு ராசி வாசகர்களே! தெய்வ பக்தியோடு, தேச பக்தியும் அதிகம் கொண்டிருப்பீர்கள். அன்பு, பொறுமை, பக்தி, நாணயம் அனைத்தும் உங்கள் உடன்பிறந்த உயர் பண்புகளாகும்.

சுய கௌரவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உங்களை கவரிமான் பரம்பரை என்றுதான் சொல்ல வேண்டும். "ஆசை" என்ற சொல்லை அகராதியில் இருந்தே அகற்றி விடுவீர்கள். பெருந்தன்மை கொண்டவர்களாகவும் விளங்குவீர்கள்.

ஆன்மீக சிந்தனை கலந்த வாழ்க்கையை விரும்புவீர்கள். வீரமும், விவேகமும் கொண்டு செயல்படுவதோடு உறுதியோடு நின்று இறுதிவரை போராடுவீர்கள். இதுவே உங்கள் வெற்றியின் ரகசியமாகும்.

வெளியில் சுதந்திரப் பறவைகளாகத் திரியும் உங்களுக்கு வீட்டில் ஏதாவது ஒரு வகையில் நிம்மதியின்மை ஏற்படும். தாரத்தாலும், தனயனாலும் நிம்மதியிழக்காதிருக்க வேண்டுமானால் நல்ல பொருத்தம் பார்த்தே மணம் முடிப்பது அவசியமாகும்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணத்தைப் பெற்ற உங்களுக்கு இந்த புத்தாண்டு எந்தெந்த வழிகளில் எல்லாம் ஏற்றம் தரப்போகிறது என்பதை நவக்கிரகங்களை வைத்து அறிந்து கொள்ளலாம். குருவின் பார்வை பலம் உங்களுக்கு பக்கபலமாக அமைவதால் எதற்கும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. வருடத்தின் தொடக்கத்தில் குரு குடும்ப ஸ்தானத்தை பார்க்கிறது. குருபெயர்ச்சிக்கு பிறகு உங்கள் ராசியை பார்க்கிறது. எனவே, தொடர்ந்தே நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்களை பெறமுடியும். குடும்ப சுமை குறையும். கொண்டாட்டங்களும் குதூகலங்களும் அதிகரிக்கும்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்

இதுவரை உங்கள் ராசிக்கு 6இல் சஞ்சரித்து வந்த சனி பகவான் 22.5.2003 முதல் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்க தொடங்குகிறார். குடும்ப அதிபதியாக விளங்கும் சனி குடும்பத்தில் ஒருபோதும் அமைதியை குறைக்கமாட்டார். உத்தியோகத்தில் மாற்றம் கிடைக்கும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு அஸ்திவாரம் போடுவீர்கள். வழக்குகள் சாதகமாகும்.

"ஏழில் சனி வந்தால்
ஏராளம் மாற்றம் வரும்!
நாளும் பகை கூடும்
நலமெல்லாம் பறந்தோடும்!
வாழ்வில் சனியதனை
வழிபட்டால் வரம் கிடைக்கும்"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

கண்டகச் சனியாக இருந்தாலும்கூட கைகூப்பித் தொழுதால் தொல்லைகள் எல்லையை விட்டு விலகி சென்றுவிடும். வீடு, பூமி போன்றவற்றை வாங்கி மகிழ வாய்ப்பு உருவாகும். கல்வித் தடை அகன்று கனிவோடு படிப்பைத் தொடர்வீர்கள். தொழிலில் மாற்றுத் தொழிலை உருவாக்கும் அமைப்பும் கிட்டும். தசா புத்தி பலம் பெற்றவர்களுக்கு பதவிகள் கூட வந்து சேரும். வாகன மாற்றம் செய்து கொள்வது நல்லது. அதன் மூலம் வரும் விபத்துக்களில் இருந்து தப்பிக்க இயலும்.

### குருபெயர்ச்சிக் காலம்

23.7.2003 அன்று உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, உங்கள் ராசியை பார்க்கும் குருவால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய வழி கிடைக்கும். இதுவரை தொழிலில் ஏற்பட்ட விரயங்களை இழப்புகளை ஈடு செய்யும் காலம் இது.

இப்போது பூரண வியாழ நோக்கத்தால் புதுவாழ்வு அமையும். வழக்குகள் வெற்றியைத்தரும். அரசியல்வாதிகளுக்கு நல்ல அனுகூலமான திருப்பங்களும் பதவி வாய்ப்புகளும் கிட்டும். சகோதர வழி சச்சரவுகள் குறையும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும்.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் ராகு உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்திலும், கேது 11ஆம் இடத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இனி 5இல் சஞ்சரிக்கும் ராகுவால் புதிய பாதை ஏற்பட்டு வருமானம் பெருக வழி கிடைக்கும். அன்னியதேச அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் உதிரி வருமானம் பெருகும். விலகிச் சென்ற தம்பதியர் இணைவர். உத்தியோகத்தில் நீண்ட தூர மாற்றங்கள் வந்துசேரும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு பெற்றோர் சம்மதத்துடன் விரும்பிய மணமகனை மணந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும். பொது வாழ்வில் ஈடுபட்டு பொறுப்பேற்பீர்கள். ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கா விட்டாலும் கூட தூரத்து சொந்தங்களின் துணை வந்து சேரும். கணவர் கைநிறைய பொருள் குவிப்பார். போட்டி பந்தயங்களில் கூட உங்களுக்கு வெற்றி கிடைக்கும். குலுக்கல் முறையில் வெற்றி பெற்று பூமி மற்றும் இல்லங்கள் வந்து சேரலாம். புதிய தொழில் ஜூன் மாதத்திற்கு மேல் தொடங்கி பொருள் வளத்தை மேலும் பெருக்கிக் கொள்வீர்கள்.

### வக்ர காலங்கள்

இந்த ஆண்டில் சனி, செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் வக்ரமடைகின்றன. அவற்றில் குருவின் வக்ரமும், சனியின் வக்ரமும் கவனமுடன் நடந்து கொள்ள வேண்டிய காலமாகும்.

செவ்வாய் வக்ரமும், புதன் வக்ரமும் பொன் கொழிக்கும் காலமாகும். அக்காலத்தில் எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறலாம். பிள்ளைகள் வழியில் முன்னேற்றம் கிட்டும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வீடு வாங்கி கிரக பிரவேசம் செய்து மகிழ்வீர்கள்.

சனி மற்றும் குருவின் வக்ர காலத்தில் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினை அதிகரிக்கும். இறை வழிபாடு இன்பம் தரும்.

### ஜனவரி

வரவை விட செலவே அதிகரிக்கும் மாதமாக அமைகிறது. அதிகப்படியான கடன் ஏற்படவாய்ப்புகள் உண்டு. சிக்கனத்தைக் கடைபிடிப்பதன் மூலம் சிரமங்களிலிருந்து விடுபடலாம். திடீர் பயணம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். சொத்துக்கள் வாங்க, விற்க வழி பிறக்கும். புதிய ஒப்பந்தங்கள் மாத கடைசியில் வந்து சேரும். அரசியல் வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் கிடைக் கும். ஆன்மீகப் பயணம் அதிகரிக்கும்.

### பெப்ரவரி

நின்றுபோன காரியங்கள் யாவும் செயல்படத் தொடங்கும். பணவரவு திருப்தியளிக்கும். தொழிலுக்காக எடுத்த முயற்சி கைகூடும். குடும்பத்தில் அமைதி கூடும். வழக்குகள் சாதகமாகும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். நண்பர்களின் உதவிகள் உங்கள் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமையும். வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயண முயற்சி கைகூடும். பரிசு கிட்டும். வாகன யோகமுண்டு.

### மார்ச்

எப்படிப்பட்ட சிக்கலையும் தீர்த்து விடுவீர்கள். தெய்வீக சிந்தனை மனதில் வலம் வரும். கொடுக்கல், வாங்கல் திருப்தியளிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் தேவைகள் குறையவில்லையே என்ற மன ஏக்கம் ஏற்படும். பெற்றோர், உடன் பிறந்தவர்கள் வகையில் அலைச்சலும், உபத்திரவங்களும் இருக்கும். செயல்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெறும். வழக்குகளை கொஞ்சம் தள்ளி வைப்பது நல்லது. பூமி விற்பனை ஏற்படலாம்.

### ஏப்ரல்

உங்களில் பலர் பழகினாலும், சிலர்தான் உங்களிடம் உண்மையாக இருப்பர். தொழிலுக்காக எடுத்த முயற்சி உறவினர் மூலம் கைகூடும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். பிரச்சினைகள் சூரியனைக் கண்ட பனிபோல மறையும். மீன சுக்ரனால் எதிரிகளின் பலம் ஒங்கும் நேரமிது. வழக்குகள் அதிகரிக்கும்.

பணம் பல வழிகளில் வந்தாலும் சேமிக்க இயலாது. உடல் நலத்தில் அதிக அக்கறை செலுத்தும் சூழ்நிலை உருவாகும். சில விஷயங்களை மனதுக்குள்ளே வைத்துக் கொண்டு வெளியில் சொல்ல முடியாமல் தவிப்பீர்கள்.

### மே

கடந்த கால ஆசைகள், கனவுகள், லட்சியங்கள் எதுவாயினும் அவை இப்போது வெற்றிகரமாக நிறைவேறும். உடல் நலம் நல்ல ஆரோக்யத்தை அடையும். மனதில் தைரியமும் உற்சாகமும் பிறக்கும்.

கொடுக்கல் வாங்கல் இனங்களில் சில பிரச்சினைகள் ஏற்படும். ஒரு கடனை தீர்க்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உண்டு. இவற்றை எல்லாம் உங்களுடைய சாமர்த்தியத்தால் தான் சமாளிக்க முடியும். முன்னோர் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.

### ஜூன்

எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய காலகட்டம் இது. உடல் நலம் மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். நண்பர்கள் பகைவர்களாக மாறி நடப்பர். வரவை விட செலவு இரு மடங்காகி மனம் மயங்க செய்யும். சூரியனின் சஞ்சார நிலை சாதகமாக உள்ளது. மனைவி மக்கள் வழியில் இருந்த பிணக்குகள் தீரும். தூரதேசத்தில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும்.

### ஜூலை

எதிலும் முன்னெச்சரிக்கையோடு செயல்படவேண்டிய மாதமிது. பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் ஏற்படும். மனதில் இனம்புரியாத கவலை உருவாகும். சிம்ம குருவின் சஞ்சாரம் நற்பலன்களை வழங்கும். தாமதப்பட்டு வந்த காரியங்கள் எல்லாம் வேகமாக தலைதூக்கி செயல் வடிவம் பெறும்.

### ஓகஸ்ட்

எதை செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. மனதில் தெளிவு பிறக்கும். உற்சாகம் உண்டாகும். பெற்றோர், சகோதர வழியில் அனுசரித்து செல்வது நல்லது.

புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு உண்டு. எங்கு சென்றாலும் போட்டியைச் சந்தித்து கொண்டிருந்த உங்களுக்கு இனி எல்லோரும் நண்பர்களாக மாறுவார்கள்.

### செப்ரெம்பர்

எதையும் உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும் என்பதே உங்கள் கொள்கையாகும். தொழில் படிப்படியாக உயரும். உறவினர்கள் வருகையால் செலவு ஏற்படும். திடீர் பணவரவு உங்கள் மனதிற்கு மகிழ்வூட்டும். நண்பர்கள் சிலர் ஒதுங்கிச் செல்வர்.

குடும்பத்தில் தடைப்பட்ட காரியங்கள் மாதக் கடைசியில் துரிதமாக நடைபெறும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவர். உறவினர் பகை அகலும். தந்தை வழி ஒத்துழைப்பு கிட்டும். அதே நேரம் சகோதரர்களின் சச்சரவு கூடும்.

### ஒக்ரோபர்

ராகு அஷ்டலட்சுமி யோகத்தை வழங்குவார். எனவே, நல்லமனம் கொண்ட உங்களுக்கு நாளும் காரியம் வெற்றி பெறும். பண வரவு திருப்தியளிக்கும். உடன் இருப்பவரிடம் கருத்து வேறுபாடு விலகும். சனியின் வக்ர இயக்கத்தால் உங்களை நேசித்த ஒருவரை பிரிய நேரிடலாம். வீடு, வாகனம், நிலம் இவற்றால் செலவு ஏற்படும்.

திருமணம் மற்றும் சுபகாரியங்களை அமோகமாக நடத்த ஏற்பாடுகளைச் செய்வர்.

### நவம்பர்

குரு பார்வையால் குடும்பப் பிரச்சினைகள் தீரும். வரவு அதிகரிக்கும். நின்ற காரியம் உடனே முடிந்து விடும். திடீர் பயணங்கள் இருக்கும். பாராட்டும், மதிப்பும் உயர்ந்து கொண்டே செல்லும். சுபகாரியத் திட்டம் கைகூடும். வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள அழைப்புகள் வீடு தேடி வரும். வீடு, நிலம், வாங்கும் சூழ்நிலை ஏற்படும். வாகனம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். மனப்பயம் விலகும். மக்களின் பாராட்டுகளும், உறவினர்களின் ஒத்துழைப்பும் கிட்டும்.

### டிசெம்பர்

வரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். திடீர் இடமாற்றம் ஏற்படலாம். புதிய பொறுப்புகள் வந்து சேரும். திட்டமிட்டபடி எதையும் முடித்து விடுவீர்கள். பணம் எவ்வளவு வந்தாலும் செலவுகள் வந்து பணத்தை விரயம் ஆக்கும்.

எதிர்பாராத பயணம் உண்டு. கடிதங்கள் மூலம் கனிந்த தகவல் வரும்.

உங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியமும், புகழும் கிடைக்கும். தொழில்களில் நல்ல வாய்ப்புகள் வந்து வாயிற்கதவைத் தட்டும். புதிய பங்குதாரர்கள் சேருவர். மாதக் கடைசியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் ஏராளம் நடைபெறும்.

(மிகுதி நாளை)

---

யாழ்.பல்கலைக்கழகத்தில்

# அரசியல்வாதியின் சிபாரிசுடன் சாரதி பணிக்கு ஆள் நியமனமா?

## ஊழியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.பல்கலைக்கழகத்தில் அரசியல்வாதி சிபாரிசு செய்த நபரை சாரதிப் பணிக்கு நியமிக்கும் முடிவைக் கண்டிப்பதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

அதிகாரத்திலுள்ள அரசியல்வாதியொருவர் தனது சொந்த வாகனமொன்றை பல்கலைக்கழகப் பாவனைக்காகத் தற்காலிகமாக வழங்கியுள்ளார். இவ்வாகனத்துக்கான சாரதியாக அவ்வரசியல்வாதி குறிப்பிடும் நபரையே நியமிப்பதென யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக அறிகிறோம். இத்தீர்மானத்தை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. துரிதமாகவும், விதிகளுக்கு உட்பட்டும் சாரதி வெற்றிடத்தை நிரப்ப முடியுமென ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கான வழிமுறைகள் குறித்து துணைவேந்தருடன் நேரடியாகக் கலந்துரையாட நேரம் ஒதுக்கித் தருமாறும் ஊழியர் சங்கம் வேண்டியுள்ளது.

அரசியல்வாதிகளிடம் சலுகை பெறும் நோக்கில் உள்ளக ஊழியர்களின் வாய்ப்புகளைத் தட்டிப் பறித்தலையோ, ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு முரணாக நியமனங்களை மேற்கொள்ளுதலையோ ஊழியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்காது - என்றுள்ளது. (ஒ)

## ஆலயம் கட்ட நிதி உதவி

வலி.கிழக்கு,ஜன.23

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி வளாகத்தில் விநாயகர் ஆலயம் ஒன்றை நிறுவ லண்டனிலுள்ள சிவயோகம் அறக்கட்டளை நிதியம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-180)



நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் அண்மையில் யாழ். போதனாவைத்தியசாலையில் நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

# நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக்கொள்வது எப்படி?

தற்பொழுது யாழ்.நகரில் பரவி வரும் இனங்காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் உயிர்கள் பலியாகிக் கொண்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. இதற்குக் காரணம்தான் என்ன?

உடலைப் பாதுகாத்துக்கொள்ள நாம் செய்யவேண்டிய முதற் கடமையே நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையாமல் பார்த்துக்கொள்வதுதான். அதற்கு அடுத்தபடிதான் மருந்துகளும், மாத்திரைகளும். சரி! நோய் எதிர்ப்பு சக்தி என்றால் என்ன என்பது எமது அடுத்த கேள்வி. நோய் எதிர்ப்பு சக்தி என்பது நம் உடலுக்கு தேவையான கவசம் போன்றது. எல்லையில் நின்று நம் மண்ணைப் பாதுகாக்கும் வீரர்கள் போன்று சாதாரண காய்ச்சல் முதல் பல உயிர் கொல்லி நோய்கள் வரை நம் உடலை பாதுகாத்து, அந்நோய்களில் இருந்து பாதுகாப்பளிப்பதுதான் இதன் வேலை.

இதனால், நோய் எதிர்ப்பு சக்தியை, நம் உடலில் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு மிகமிக முக்கியம் நாம் உட்கொள்ளும் உணவும் நம் பழக்கவழக்கங்களும் ஆகும். நம் உணவில் மூலிகைகள் சேர்க்கப்பட வேண்டும். மூலிகைகள் என்பது சக்திக்குரிய வேப்பிலை, சிவனுக்குரிய வில்வம், விஷ்ணுவுக்குரிய துளசி, விநாயகருக்குரிய அறுகம்புல், பிரம்மாவுக்குரிய அத்தியிலை, கங்கைக்குரிய மாவிலை மற்றும் தெய்வீக மூலிகைகளாக வழிபடும் அரசிலை, ஆலயிலை, கரிசலாங் கண்ணி, நெல்லி, தும்பை, குப்பைமேனி, கீழ்க்காய் நெல்லி, ஜாதிக்காய், தான்றிக்காய் போன்றவைகளில் ஆறு மூலிகைகளைப் பறித்து, வெயிலில் உலர்த்தி, பொடி செய்து, சம அளவில் கலந்து ஒரு போத்தலில் வைத்துக்கொள்ள வேண்டும். பின் இவற்றில் இருந்து இரண்டு கரண்டி தூள் எடுத்து தண்ணீரில் கலந்து உணவுக்குமுன் தினமும் காலை ஒரு வேளை உட்கொண்டால் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்பது சித்த மருத்துவம்.




இந்த மூலிகைகளில் விட்டமின் 'ஏ', விட்டமின் 'பி' உள்ளன.

அடுத்ததாக நோய் எதிர்ப்பு சக்தியை பெற உணவுகளின் பங்களிப்பை நோக்குவோம். இந்த உணவுகள் சத்துள்ளதாக அதாவது விட்டமின்கள், தாதுப்புக்கள், புரதம் போன்றவற்றை அடக்கிய சத்தான உணவாக இருக்க வேண்டும். இவைகள்தான் உடலில நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டி வைரஸ், பக்ரீரியா மற்றும் பிற நோய்க் கிருமிகளால் ஏற்படும் நோய்களில் இருந்து நம்மை பாதுகாக்கின்றன. நோய் எதிர்ப்பு சக்தியை பெரிதும் தூண்டும் சில முக்கியமான உணவுப் பொருள்களைப்பற்றி தெரிந்துகொள்வது அவசியம்.

## கரோட்டின்

காய்கறிகளிலேயே கரட் எல்லா நோய்களையும் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கரட்டில் கரோட்டின் (**Anti oxidant - Beta carotene**) என்ற ஒரு சக்தி வாய்ந்த நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் பொருள் உள்ளது. இந்த நோய் எதிர்ப்பு சக்தியானது வைரஸ், பக்ரீரியா மற்றும் புற்றுநோய் வரை எதிர்த்து செயற்படும் திறமை வாய்ந்தது.

இந்த பீட்டா - கரோடின் என்ற பொருள் கரட்டில் மட்டுமல்லாது மாம்பழம், பப்பாளி, தோடம்பழம், பூசணிக்காய், கீரை வகைகள், வெண்ணெய், தயிர் மற்றும் கொழுப்பு நீக்கப்படாத பால் போன்றவற்றிலும் உள்ளது. இவை அனைத்திலும் இருப்பதை விட கரட்டில் அதிகம் உள்ளதால் தினமும் கரட் சாப்பிட்டு வேண்டிய நோய் எதிர்ப்பு சக்தியை சுலபமாகப் பெறலாம்.

## பழங்கள், காய்கறிகள்

பொதுவாகவே பழங்கள் மற்றும் காய்கறிகள் உண்பதன் மூலம் பல நன்மைகள் உண்டு. மற்ற உணவுப் பொருள்களை விட பழங்கள் மற்றும் காய்கறிகளில் நோயை எதிர்த்துச் செயற்படும் இயற்கைப் பொருள்கள் அதிகமாக உள்ளன. இவை எல்லா விதமான நோய்க்கிருமிகளையும் அழித்து, உடலுக்கு ஆரோக்கியத்தை தரும் சக்தி உடையவை. அண்மையில் ஜேர்மனியில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் படி மாமிசம் சாப்பிடுபவர்களின் உடலில் நோயை எதிர்த்து செயற்பட 100% இரத்த வெள்ளையணுக்கள் தேவையென்றால், பழங்கள் மற்றும் காய்கறிகள் சாப்பிடுபவர்களின இரத்தத்தில் 50% இரத்த வெள்ளையணுக்கள் போதுமானவை என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளைப்பூடு

வெள்ளைப்பூடினை தெரியாதவர்கள யாரும் இல்லை. என்றாலும் இதை பிடிக்காதவர்கள் அதிகம் பேர் இருப்பார்கள்; இதன் வாசனை பிடிக்காது என்று ஒதுக்குவார்கள். பொதுவாகவே மருந்து என்றால் கசக்கத்தான் செய்யும்.

பூண்டிலும் நோயெதிர்ப்பு செயற்பாடுகள் உள்ளன. எனவே பூண்டையும் நாம் அன்றாடம் உணவிலே சேர்த்து உட்கொண்டால் ஆரோக்கியமான உடலைப் பெற்று வாழலாம்.

எனவே நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக்கொள்வதன் மூலம் நோய்களை விரட்டி நலமுடன் வாழலாம்.

**மருத்துவ சித்தன்**

# தென்மராட்சியில் இதுவரை 59 பாடசாலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.23

கடந்த கால இடப்பெயர்வின் பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 59 பாடசாலைகள் மீண்டும் தமது சொந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

2000 ஆம் ஆண்டு மே மாதம் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பாடசாலைகள் இடம்பெயர்ந்து வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இயங்கிவந்தன.

கடந்த ஆண்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சுமுக நிலை தோன்றியதை அடுத்து மேற்படி பிரதேசப் பாடசாலைகள் மீண்டும் தமது சொந்த இடத்தில் இயங்கி வருகின்றன.


தென்மராட்சி பிரதேசத்தின் 67 பாடசாலைகளில் தற்பொழுது 59 பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் இயங்குகின்றன. இவற்றில் மொத்தம் 15 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 712 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இடப்பெயர்வின் முன்னர் 19 ஆயிரம மாணவர்கள் கல்வி கற்று வந்த போதும் தற்போது அதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றார்.

(ஒ-10)


சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலரை

**வாழ்த்தி வரவேற்கிறோம்**



வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நிர்வாக அதிகாரியாக (A.O.) கடமையாற்றிய

**திரு. ச.செல்வராசா**

உதவிப் பிரதேச செயலராக (A.D.S.-V.S.W.) பதவி உயர்வு பெற்றமையிட்டு வாழ்த்தி வரவேற்கின்றோம்.

செ.ரபேஸ் J.P.
*உள்ளூராட்சி உதவியாளர், பிரதேச சபை, மானிப்பாய்.*

திருமதி செ.செல்வராணி



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 03 - 1918 | 24 - 12 - 2002 |



**திருமதி தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்**

ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தும்
அம்மா எனும் உறவு சிறப்பானதே!
அம்மா என்றழைக்க எமக்கினியாருளர்?
அம்மா நீங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எமைவிட்டு செல்லவில்லையே!

எமது அன்னையின் இறுதிக்கிரியைகளின் போது ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'அம்மன் அகம்'*
*மீசாலை கிழக்கு, மீசாலை.* (C/26192) -குடும்பத்தினர்-


## திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டி அடுத்த மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.


**வேலையாள்கள் தேவை**

கட்டட நிர்மாண வேலைக்கு பின்வரும் தொழிலாளர்கள், நாள்கூலி அல்லது ஒப்பந்த அடிப்படையில் தேவை.

1. மேசன் தொழிலாளர்கள்
2. தச்சுத் தொழிலாளர்கள்
3. கூலியாள்கள்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-
**சிவன் மாளிகை,**
**166, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.** (13587)



**வீடு விற்பனைக்கு**

இல. 37/22, முதலாம் ஒழுங்கை, கந்தர்மடத்தடியில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள இரு வீடுகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **S.செல்வராசா,**
*இல. 222, செம்மணி வீதி,*
*நல்லூர்.*
(13590)


# சாயி சிந்தனை

## தன்னுள் நோக்கும் பழக்கம்



உண்மையான மனிதன் தன்னுளளே பார்க்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வான். ஒரு மிருகம் பசுமையான பிரதேசம் எதையாது கண்டால் அதன் விளைவுகளைப் பற்றி துளிகூடக் கவலைப்படாமல் அந்த இடத்துக்கு விரையும். ஆனால், தன் விவேகத்தைப் பயன்படுத்தி ஆராய்ந்து செயற்படுவது மனிதனின் கடமை. மனிதன் எப்போதும் தன் கடமையைப் பற்றி விழிப்போடு இருக்கவேண்டும். இல்லையெனில் அவன் அதற்குப் பெரிய விலை கொடுத்தாகவேண்டும். எப்போதெல்லாம் பஸ் அல்லது விமானம் தாமதமாக வருகிறதோ, தாமதத்திற்கு பொறுப்பானவர்களைப் பயணிகள் திட்டித் தீர்க்கின்றனர். இதற்குக் காரணம் கடமைகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுவதில்லை.

இதைப் போலவே தன் கடமையை ஒழுங்காக செய்யாத மனிதனும் கூட விமர்சிக்கப்படுவான். மனித உயர் குணநலன்களை நடைமுறைப் படுத்துவதுதான் உண்மையான மனிதப்பிறவி. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை ஆகிய ஐந்தும் மனிதனின் பஞ்ச பிராணன்கள் போன்றவை.

பஞ்ச பிராணன்கள் இல்லாவிட்டால் மனிதன் இருந்தும் இறந்தவன் போலததான். ஒவ்வொன்றும் அவனது கீழான நிலைக்கு காரணமாகின்றது. இவ்வாறு ஐந்து மனித உயர்குண நலன்களை நடைமுறைப்படுத்தாமல் மனிதன் தன்னையே கொன்றுவிடுகிறான். அன்பு என்பது பெரிய சொத்து. அன்பினை வளர்த்துக்கொண்டு எப்போதும் சத்தியத்தையே பேசுங்கள்.

*ஆதாரம் : சனாதன சாரதி*


**The Chamber Of Commerce & Industries of Yarlpanam (CCIY)**

வர்த்தகக் கைத்தொழில் மன்றம் - யாழ்ப்பாணம்

**யாழ் நகரில் வர்த்தக சமாதானச் சுற்றுலாவுக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**காலம் :** 24 ஜனவரி 2003
**நேரம் :** பி.ப. 2.00 மணி தொடக்கம் பி.ப 4.15 மணி வரை
**இடம் :** GTZ - யாழ்ப்பாணப் புனர்வாழ்வுத் திட்டம் (JRP), இல. 11, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

இல. 50, நவம்மாவத்தை, கொழும்பு - 02 இல் அமைந்துள்ள இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றத்தைப் (The Ceylon Chamber of Commerce) பிரதிநிதித்துவப்படுத்தும் பேச்சாளர்களினால் உரையாற்றப்படவுள்ள துறைகள் பற்றிய விவரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளன.

*துறைகள்:*

1) தரம் வாய்ந்த சுற்றுலா விடுதி நிர்மாணம்.
Construction of Hotels.
2) விவசாயம் சார்ந்த தொழிற்றுறை மரக்கறி, பழவகை பதனிடலும், தகரங்களில் அடைத்தலும் பற்றியது.
Agro based Industries (Canning/Processing of fruits & Vegetables).
3) சர்வதேச தரத்திலான ஆங்கில மொழிமூல பாடசாலை.
Education - Facilities to setup International School.
4) கடல் வளத் தொழிற்றுறை (உற்பத்தி, பதனிடல், பாதுகாத்தல்)
Fishery Industry (Freezing,Canning, Processing Facilities).
5) தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டம் - Setting up of IT Projects (Development of IT Road Map for Jaffna, Development of Software, Accounting package for non governmental Institutions).
6) தன்னியக்க மோட்டார் இயந்திரச் சேவைகள் தொழிற்றுறை.
Auto Mobile Service Industry (Maintenance/Servicing of auto mobiles).
7) ரயர் மீளமைப்பு.
Retreading of Tyres.
8) பொருள்களுக்கான கடல்மார்க்க போக்குவரத்து கொள்கலன் சேவை.
Logistics (Transportation/Freight forwarding etc.)

(C/26196)


# மரண அறிவித்தல்கள்


## திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், பன்னாலை ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம் நேற்று (22.01.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லப்பிள்ளை தம்பதிகளின் மகளும்,காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியாரும், திருமதி சு.பவளராஜேஸ்வரி,சி.பவாநந்தன்(கிராம அலுவலர், அக்கராயன்), சிகுணாநந்தன், நகுலேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.சுந்தரலிங்கம் (ஸ்கந்தபுரம்), சி.நகுலேஸ்வரன் (ஆஸ்திரேலியா), ப.சிவராஜினி(சுழிபுரம் மேற்கு), கு.சித்திரபானு(கிளி. கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச.ஊழியர்) ஆகியோரின் மாமியாரும் அருணாவருணா, தாரணிகா, றுக்ஷனிகா, தனுஜிகா, வித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) பிப. 2 மணியளவில் சுழிபுரம் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.
ச.பவாநந்தன் (மகன்-கிராம அலுவலர், அக்கராயன்)
(13596)



## க.திரித்தம்பி சின்னத்தம்பி (மாம்பழம்)

*(சாவகச்சேரி காளிகோயில் பூசகர்)*

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த கதிர்த்தம்பி சின்னத்தம்பி என்பவர் நேற்று (22.01.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அல்லாரை தெற்கு. மீசாலை.*
க.பூபாலசிங்கம் (சகோதரன்)
(C/26197)

# வடக்கு - கிழக்கு மாகாணசபையின் போட்டிப் பரீட்சைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.23

வடக்கு - கிழக்கு மகாண சபையால் கணக்குப் பதிவாளர்(Book Keepar), படவரைஞர் (Drughtsman), தொழில்நுட்ப அலுவலர்கள் (Technical Officer), தரவுப்பதிவு இயக்குநர் (Data Entry Operator) ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் கணக்குப் பதிவாளருக்கு 14 பேரும், படவரைஞர் பதவிக்கு 9 பேரும், தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு 25 பேரும், தரவுப் பதிவு இயக்குநகர் பதவிக்கு 19 பேரும் யாழ்.மாவட்டத்திலிருந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பதவி ரீதியாக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விவரங்கள் வருமாறு:-

### தொழில்நுட்ப அலுவலர்கள்

எஸ்.அகிலன்(அரசடி வீதி, திருநெல்வேலி), எஸ்.யசிதரன்(3ஆவது மைல் லேன், கொக்குவில் கிழக்கு), என்.சஞ்ஜீவ் (பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்), கே.பரமேஸ்வரன் (கமல் வளவு, இணுவில் கிழக்கு), எம்.வைத்தீஸ்வரன் (இணுவில் கிழக்கு).

ஆர்.செந்தூரன்(தலக்கந்தை, கரவெட்டி கிழக்கு), ஏ.ரஞ்சனமதி(விறுமர் கோவில், அல்வாய் வடக்கு), எஸ்.இராஜ்மோகன்(சுதுமலை வீதி, தாவடி), டி.கோணேஸ்வரன்(இல.126, ஞானவைரவர் வீதி, உரும்பிராய்), ரி.கிருபாகரன்(சம்பியன் லேன், உரும்பிராய்), ரி.நிதர்சன்(சிங்கம் லேன், உடுவில்), என்.சுகந்தன் (லோஜினி வாசா, இடைக்காடு), வி.பரதன் (சிறுப்பிட்டி மேற்கு), வி.கலாதரன் (மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்), எஸ்.நளினி (ராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு), கே.சுமதி(கந்தையாபவனம், கல்வியங்காடு), கே.யோகேஸ்வரன் (வைமன் வீதி, நல்லூர்), கே.சிவநாதன்(துரை வீதி, தாவடி வடக்கு), எஸ்.மகேந்திரராஜ் (சங்கானை), ரி.பாலதாஸ் (கலாசாலை வீதி, திருநெல்வேலி), வி.கவிதா(சன்னதி றோட், அச்சுவேலி), கே.கே.சிவாஸ்குமார் (பத்தைமேனி, அச்சுவேலி), ஆர்.திருஞானலிங்கம்(சுழிபுரம் மத்தி, சுழிபுரம்), எஸ்.முகுந்தன்(சாமியன் அரசடி, கரவெட்டி), பி.பாலமுகுந்தன் (கலாசாலை வீதி, திருநெல்வேலி).

### கணக்குப் பதிவாளர்

கதிர்காமத்தம்பி பார்த்தீபன்(வேதாரணிய வளவு, உடுவில் கிழக்கு), பாலசுப்பிரமணியம் கமலவாசகி(பருத்தித்துறை வீதி, நல்லூர்), சிவலிங்கம் ரதீஸ்குமார்(கற்கரை பிள்ளையார் கோவிலடி, குப்பிளான்), நடராசா சுபாசஜினி(75, பிரதான வீதி, சங்கானை), ஜஸ்ரின் ஞானசேகரம் சாருமதி(ஆசீர்வாதம் லேன், யாழ்ப்பாணம்).

தனுஷ்கோடி ஷபந்தினி (வாட் இல.5, நெடுந்தீவு தெற்கு), ஜெயரத்தினம் அமலா (இளவாலை), இராசலிங்கம்பிள்ளை பங்கயற்ச்செல்வி (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), முருகநாதன் சுதர்சினி (பாடசாலை வீதி, கொக்குவில் கிழக்கு), சுப்பிரமணியம் கலைச்செல்வி (ஆனைக்கோட்டை வீதி, யாழ்ப்பாணம்), குமாரசாமி பகீரதி (சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்), நடராசா லதா (தங்கோடை, காரைநகர்), சிவசுப்பிரமணியம் சிவராஜா (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்), தங்கராசா சிவமதி (கொக்குவில் கிழக்கு, கொக்குவில்).

### படவரைஞர்

எஸ்.திருப்பரன் (உப தபால் நிலையம், உடுவில்), என்.சஞ்சீவ் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), பி.பிருந்தா (மாவிட்டபுரம், தெல்லிப்பழை), எஸ்.வாகீஸ்வரன் (கலாசாலை வீதி, திருநெல்வேலி), ஏ.சுகன்யா (துவாரகா' இணுவில் கிழக்கு), எஸ்.இந்திரகுமார் (பெரியவளவு, புலோலி தெற்கு), கே.யசோகாந்தம் (நந்தாவில் வீதி, கொக்குவில்), எம்.ஸ்ரீ.சுபனு (அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி), எம்.மதனராஜ் (உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்).

### தரவுப் பதிவு இயக்குநர்

ஏ.பகீதரன் (பன்னாலை, தெல்லிப்பழை), எஸ்.மனஸ்வாணி (கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்), தி.துளசிதா (சேர்ச் லேன், கொக்குவில்), எஸ்.முரளிதாஸ் (கச்சேரி றோட், சாவகச்சேரி), என்.கேசவன் (இல.197, அடூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.கிருபாகரன் (கரணவாய் வடக்கு, கரவெட்டி), பி.கஜேந்திரன் (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), பி.மனோஜன் (கரணவாய் தெற்கு, கரவெட்டி), ஏ.கோகுலன்(உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்), எஸ்.நாகவதனா(பலாலி வீதி, யாழ்ப்பாணம்).

எஸ்.தர்சினி (பலாலி வீதி, திருநெல்வேலி), ஏ.கிருஸ்ரி (மருதடி வீதி, யாழ்ப்பாணம்).

பி.பத்மதீபன் (கே.கே.எஸ். வீதி), கொக்குவில்), என்.வசந்தகுமார்(கோப்பாய் வடக்கு, கோப்பாய்), எஸ்.தர்மசீலன் (அராலி மத்தி), கே.மணிபர்வன் (வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை), உ.தவபாலன் (அரசடி வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.திருமகள் (நவாலி கிழக்கு, மானிப்பாய்), ரி.வசந்தரூபன் (கோப்பாய் வடக்கு, கோப்பாய்).

(ஏ-5-10)


**அரியாலை,**

**84ஆவது**

**சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா -2003**

**யாழ்.மாவட்ட ரீதியான கலை, விளையாட்டுப் போட்டிகள்**

| விளையாட்டுப் போட்டிகள் | கட்டண விவரம் |
|---|---|
| ☆ கரபந்தாட்டம் (செற்-அப்) | 100/= |
| ☆ வலைப்பந்தாட்டம் (பெண்கள்) | 100/= |
| ☆ தோற்பந்து துடுப்பாட்டம் (6 பேர் கொண்டவை) | 100/= |
| ☆ மென்பந்து துடுப்பாட்டம் (7 பேர் கொண்டவை) | 100/= |
| ☆ தாச்சி (ஆண்கள்) | 100/= |
| ☆ 15 மைல் சைக்கிள் ஓட்டம் (ஆண்) | 100/= |

விண்ணப்ப முடிவுதிகதி:- 03.02.2003

நாடகப் போட்டிகள்

| | |
|---|---|
| ☆ அரச/சரித்திர/புராண நாடகம் (1 மணித்தியாலம்) | 250/= |
| ☆ சமூக/நகைச்சுவை நாடகம் (1 மணித்தியாலம்) | 250/= |
| ☆ இசை நாடகம்/நாட்டுக்கூத்து (1 மணித்தியாலம்) | 250/= |

விண்ணப்ப முடிவுதிகதி:- 28.02.2003

விண்ணப்பப்படிவத்துடன் நாடகப் பிரதிகளையும் சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பப்படிவங்களுக்கும் மேலதிக விவரங்களுக்கும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

**திரு.செ.சத்தியசீலன்** (விளையாட்டுத் தலைவர்) 52/2, விபுலானந்தர் வீதி, அரியாலை.
**திரு.யோ.முகுந்தன்** (பொதுச் செயலாளர்) 06, கனகரத்தினம் வீதி, அரியாலை.
**திரு.க.சண்முகலிங்கம்** (கலைச்செயலாளர்) 132, திருமகள் வீதி, அரியாலை.

(13571)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண் சிறக்க 03 - 05 - 1925



விண் சிறக்க 24 - 12 - 2002

**அமரர் சங்கரப்பிள்ளை வல்லிபுரம்**

அன்பினால் வழிநடத்தி அவனியிலே
நாம் உயர வழி சமைத்தீர்
கருத்தினால் நல்லதோர் இல்லம் சிறக்க
நல்லுறவு முறை கூறி சொந்தம் காத்து நின்றீர் இன்று.

அன்பு மொழி அடங்கிடினும்
ஆசை முகம் மறைந்திடினும்
அருகிருந்த காலங்களை
அன்புடனே நினைக்கின்றோம்
உம்மை இழந்த துன்பத்தை
சுமக்கின்றோம் மனம் சோர
சத்தியத்தை நம்பினீர்
சத்தியம் உம்மை விடுதலையாக்கியதோ?
ஆத்மசாந்திக்கு கரம் கூப்பி ஆராதிக்கின்றோம்.

சிறிநிவாஸ், நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

(13595)



# மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (அப்பர்)**

நல்லூர், நாயன்மார் வீதியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (அப்பர் அப்பர்) நேற்று (22.01.2003) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரிமணியின் அன்புக் கணவரும் சந்தானலட்சுமி, விவேகானந்தன் (ஆனந்தன்), சுடரத்திரா, யோகேஸ்வரி (சித்திரா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஸ்கந்தராஜா (சிறி - ஓய்வுபெற்ற உவூசியர், சுழிபுரம் பிரதேச சபை), பொன்ரதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜிதன் (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.), கிஜுஜா (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

தகவல்: விவேகானந்தன் (ஆனந்தன் - மகன்)

(13592)


### கணனி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.வை.எம்.சி.ஏயின் அனுசரணையுடன் ஐ.பீ.எஸ் இனால் நடத்தப்படும் இலவச கணனிக் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 2மணியளவில் இருந்து 6மணிவரை யாழ்.வைஎம்சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் முன்கூட்டியே தமது பதிவுகளை யாழ்.வை.எம்.சி.ஏயில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஏ-8)

### உயர் பட்ட படிப்புகள் பீட ஆய்வு அமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடம் நடத்தும் முதலாவது ஆய்வு அமர்வுகள் எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் காலை 8.45 முதல் பிற்பகல் 1.30 மணிவரை பல்கலைக்கழக பூவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பட்டப்பின்படிப்பு மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரின் ஆய்வுகளை வெளிக்காட்டுதலும், அவற்றினை அறிமுகப்படுத்துவதுமே இந்த ஆய்வு அமர்வின் நோக்கமென உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க சிற்றம்பலம் தெரிவித்தார்.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த ஆய்வு அமர்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

(ஏ-5)


# வாழ்த்துகின்றோம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் நற்பணியாற்றித் தொடர்ந்து வலிகாமம் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகித் தற்போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராய் பதவி உயர்வுபெற்ற

**திருமதி றெஜீனா இருதயநாதன்**

அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் பணி சிறக்க இறையருளை இறைஞ்சுகின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்.

(13591)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 442 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 21.01.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 4703824-4718836 |

வெற்றி இலக்கங்கள் **07 08 14 24**

லக்கினம் கடகம்



ஜக்பொட் பரிசு ரூபா. 2,324,600/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,075,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 336,044 | 10 | 3,360,440 |
| 2 இலக்கங்கள் | 30,781 | 20 | 615,620 |
| 1 இல + லக்கினம் | 30,625 | 30 | 918,750 |
| 2 இல + லக்கினம் | 2,821 | 100 | 282,100 |
| 3 இலக்கங்கள் | 821 | 500 | 410,500 |
| 3 இல + லக்கினம் | 86 | 5,000 | 430,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,324,600 | - |
| மொத்தம் | 401,183 | - | 6,517,410 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,517,410/-

தொடர் இல. 5692513க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 24ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4707919-3-93
4718515-1-65
4705094-7-15
4709212-0-87
4705923-6-65

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 35, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# ஒருநாள் போட்டிகளிலிருந்து ஷேன்வோர்ன் ஓய்வுபெறுகிறார்

எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பின் ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலிருந்த நான் ஓய்வு பெறவுள்ளேன். இவ்வாறு ஆஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர் ஷேன்வோர்ன் நேற்று அறிவித்தார்.

33வயதான வோர்ன், ஆஸ்திரேலியாவின் சார்பில் ஆகக்கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரராகத் திகழ்கிறார். கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற ஒருநாள் போட்டியின்போது? கீழே விழுந்ததால் அவரது தோள்மூட்டில் காயமேற்பட்டது. அதன் பின் சத்திரசிகிச்சை செய்துகொண்ட வோர்ன், தற்போது குணமடைந்துள்ளார்.

"டிசெம்பர் 15ஆம் திகதி ஏற்பட்ட காயத்திலிருந்து குணமடைந்த பின் தற்போது மிகுந்த மகிழ்ச்சியாகவுள்ளேன். ஆனால், ஒரே பகுதியில் இரு பெரிய காயங்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன. எனக்கு 33 வயதாகிறது. முழுமையாகக் குணமடைந்து உலகக் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எனது அணியினருக்கு உதவ முடியுமென நம்புகிறேன்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப்பின் நான் முன்னுரிமையளிக்கவுள்ள விடயம், ஆஸ்திரேலியாவுக்காக டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதே. அதற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடிய எதையும் நான் செய்யமாட்டேன்.

"தேசிய தேர்வுக் குழுவினர், பயிற்றுநர், புச்சானன், ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங், மருத்துவ ஆலோசகர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனை நடத்திய பின் இத்தீர்மானத்தை மேற்கொண்டுளளேன்" - இவ்வாறு ஷேன்வோர்ன் கூறினார்.

1991 முதல் ஆஸ்திரேலியாவுக்காக விளையாடி வருகிறார் ஷேன் வோர்ன். இதுவரை 191 ஒரு நாள் போட்டிகளில் 288 விக்கெட்டுக்களையும் 107 டெஸ்ட் போட்டிகளில் 491 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். முன்னாள் உப தலைவரான அவர், 11 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அணித்தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.



டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆகக்கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்தியோரில் மேற்கிந்தியத் தீவுகளின் கொட்னி வோல்ஷ், 132 போட்டிகளில் 519 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். ஷேன்வோர்ன் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

இதேவேளை, வி.பி. கிண்ணத்திற்கான ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. மூன்று போட்டிகள் கொண்ட இச்சுற்றில் தம்மால் பங்குபற்ற முடியுமென ஷேன்வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# வி.பி.கிண்ண கிரிக்கெட்: ஆஸ்திரேலியா வெற்றி!

சிட்னி,ஜன.23

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி.கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இலங்கையுடனான இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து, 214 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் அவிஷ்க குணவர்த்தன 45 ஓட்டங்களையும், குமார் சங்ககார 44 ஓட்டங்களையும், அரவிந்த டி சில்வா 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரட்ஹொக் 3 விக்கெட்டுக்களையும் வில்ஷன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, ரிக்கி பொன்டிங், மத்தியூ ஹய்டன் ஆகியோரின் அபாரத் துடுப்பாட்டத்தின் மூலம் 34.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணி சார்பாக அடம் கில்கிறிஸ்ட் 26 ஓட்டங்களையும் ரிக்கி பொன்ரிங் மற்றும் மத்தியூ ஹய்டன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 106, 80 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரிக்கி பொன்டிங் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியில் இலங்கையின் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய, சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இருவரும் பங்குபற்றாமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. (ஓ-5)

## விளையாட்டு

# 9,000 ஓட்டங்களை கடந்தார் அரவிந்த!

கொழும்பு,ஜன.23

இலங்கைக் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வா, ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

வி.பி. கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுடனான போட்டியில் 27 ஓட்டங்களைப் பெற்றபோது அரவிந்த ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பெற்ற மொத்த ஓட்ட எண்ணிக்கை 9 ஆயிரமாக உயர்ந்தது.

நேற்றுமுன்தினம் மெல்பேர்னில் நடைபெற்ற இப்போட்டியில் 73 பந்து வீச்சுக்களில் 44 ஓட்டங்களைப் பெற்றார் அரவிந்த.

37 வயதான அரவிந்த டி சில்வா, இதுவரை 298 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 9ஆயிரத்து 17 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வீரர் அரவிந்த ஆவார். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 303 போட்டிகளில் 11ஆயிரத்து 616 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்தில் உள்ளார். இந்திய அணியின் முன்னாள் வீரரான முஹமட் அஸாருதீன் 334 போட்டிகளில் 9ஆயிரத்து 378 ஓட்டங்களைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார். (ஒ-5)



# முரளிதரனுக்குத் தடை விதிக்க வேண்டும்: முன்னாள் ஆஸ்திரேலிய நடுவர் கூறுகிறார்



"இலங்கை வீரர் முரளிதரனின் பந்துவீச்சுப் பாணி முறையற்றது. அவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தடைவிதிக்க வேண்டும்."

- இவ்வாறு ஆஸ்திரேலியாவின் முன்னாள் நடுவரான லோ ரோவன் பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

"முரளிதரன் எனும் பெயர் கிரிக்கெட் சாதனைப் பதிவுகளிலிருந்து நீக்கப்படவேண்டும்.

"முரளிதரனின் பந்துவீச்சுப்பாணி தொடர்பான மனக்கசப்பு காரணமாக இலங்கை, ஆஸ்திரேலிய, இங்கிலாந்து ஆகியவற்றுக்கிடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

"இவ்வாறுக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்பதற்காக முரளியின் பந்துவீச்சுப்பாணி தொடர்பாக எவரும் கருததுக் கூறமாட்டார்கள். இதே காரணத்திற்காக கிரிக்கெட் சபைகளும், ஐ.சி.சியும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்வதில்லை.

"கிரிக்கெட் அதிகாரிகள் அவர் பங்குபற்ற அனுமதியளிப்பதும் கிரிக்கெட் விளையாட்டில் நீடிப்பதை ஊக்குவித்து வருவதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகவுள்ளன." - இவ்வாறு ரோவன் கூறியுள்ளார்.

1983 டிசெம்பரில் ஆஸி.வேகப் பந்து வீச்சாளர் இயன் மெக்கிப் தனது முதல் டெஸ்டின் முதல் ஓவரின் போதே பந்தை எறிகிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார். நடுவர் கொலின் ஈகர் இக்குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

அப்போது மறுமுனையில் நடுவராகக் கடமையாற்றியவர் ரோவன் ஆவார். மேற்படி போட்டியின் பின் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து மெக்கிப் முற்றாக ஒதுங்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# தேசிய விளையாட்டு விழா குறித்த கலந்துரையாடல்

## அமைச்சரும் பங்கேற்பு

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 29ஆவது தேசிய விளையாட்டு விழா தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் புஞ்சி ஹேவா தலைமையிலான குழு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் இங்குள்ள பல தரப்பினரையும் சந்தித்து விளையாட்டு விழாவை இங்கு நடத்துவதற்கான அடிப்படை வசதிகள், மைதானங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வீர, வீராங்கனைகளின் தங்குமிடம், உணவு ஆகிய வசதிகள் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொய்யாத்தோட்ட விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ சென்றோக் விக. எதிர் குருநகர் விளையாட்டுக்கழகம்.

★ பமிலி... வி.க. எதிர் ...ந்காமல் வி.க. (...5)

☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.23

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை முதல் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதி... விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-5 2)

## மெய்வன்மை போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.23

அகில இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் முதலாவது தேசிய தெரிவுப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20,21 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருண் ஸ்போட்ஸ் ஸ்டொட்டில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# இலங்கை அணி வீரர்களின் ஊதிய விவரம்: பகிரங்கமாக்குவதற்கு கிரிக்கெட் சபை திட்டம்?

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் சம்பளப் பட்டியலை பகிரங்கப்படுத்துவது குறித்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் இடைக்கால நிர்வாகக் குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இன்று தீர்ப்பு

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான வீரர்களின் ஒப்பந்தம் தொடர்பாக ஐ.சி.சிக்கும் அதன் அனுசரணையாளர்களுக்கும் எதிராக தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கின் தீர்ப்பு இன்று வெளியிடப்படவுள்ளது.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ், இந்தியக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான என்.பி.கே. சால்வ், இந்திய அணியின் முன்னாள் வீரர் மதன்லால் ஆகியோர் டில்லி மேல் நீதிமன்றத்தில் கடந்த வாரம் இவ்வழக்கைத் தாக்கல் செய்தனர். இவ்வழக்கு விசாரணை திங்களன்று நடைபெற்றது.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் வீரர்களுக்கும் இடையில் இழுபறி தொடர்ந்து வருகிறது.

இவ்விடயத்தில் பொதுமக்களின் ஆதரவைத் தம்மீது திருப்புவதற்காக வீரர்களின் சம்பளப் பட்டியலைப் பகிரங்கப்படுத்துவது குறித்து கிரிக்கெட் சபை ஆராய்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம் சில வீரர்கள் 85 லட்சம் ரூபாவை சம்பளமாகப் பெற்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது. கடந்த வருடம் தமக்கு கிடைத்த 24 கோடி ரூபா வருமானத்தில் 17 கோடி ரூபா வீரர்களுக்கு சம்பளமாக வழங்கப்பட்டது என கிரிக்கெட் சபை அண்மையில் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி. வழங்கும் 64 லட்சம் ரூபா டொலர் பணத்தில் 10 லட்சம் டொலர் (சுமார் 10 கோடி ரூபா) தமக்கு வழங்க வேண்டுமென வீரர்கள் கேட்கின்றனர்.

மேற்படி ஒப்பந்தம் மூலம் தமது விளம்பர உரிமைகள் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் இழப்புகளுக்கு மாற்றீடாகவே 10 லட்சம் டொலர்களை இலங்கை அணி வீரர்கள் கோருகின்றனர்.

கிரிக்கெட் சபை 12 சதவீதம் வரை வழங்குவதற்கே முன்வந்துள்ளது. இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கப்போவதாகவும் வீரர்கள் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

"உலகக் கிண்ண போட்டிகளின் அனுசரணையாளர்களுக்கு எதிரான நிறுவனங்களுடன் இலங்கை வீரர்கள் எவரும் அனுசரணை ஒப்பந்தத்தை கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் வீரர்களின் கோரிக்கை நியாயமற்றது." என கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுத் தலைவர் ஹேமக அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கை வீரர்கள் தாயகம் திரும்பியதும் அவர்களுடன் நேரடியாக பேச்சு நடத்தப்படும் எனவும் ஹேமக அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.சி.சி. தலைவர் மல்கம் கிரே செவ்வாயன்று இலங்கை வீரர்களை மெல்பேர்ன் ஹோட்டலில் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாவிடின் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர் இலங்கை அணி வீரர்களை எச்சரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அணி வீரர்கள் சிலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு விரும்புகின்ற போதிலும் முன்னணி வீரர்களான ஜயசூரிய, அத்தபத்து, முரளிதரன், மஹேல ஜயவர்த்தன ஆகியோர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

இலங்கை அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோர், முகாமையாளர் அஜித் ஜயசேகர, ஆலோசகர் துலிப் மெண்டிஸ், உடற்கூற்று மருத்துவர் அலெக்ஸ் கன்ட்ரி ஆகியோர் ஏற்கனவே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (ஒ-5)

## கொழும்பு செல்லும் உதைபந்தாட்ட அணிகள்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 16 வயதுக்குட்பட்டோர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட 'மைலோ கிண்ண' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் கொழும்பில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக இன்று கொழும்பு செல்கின்றன. (ஒ-5)

# பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குக!

## வேலையற்றோர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.23

பட்டதாரி ஆசிரியர் நியமனத்தினை பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் பட்டதாரி ஆசிரியருக்கான விண்ணப்பம் கோரப்பட்டு 15.07.2002 இலும் 03.01.2003 இலும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இவ்விரு நியமனங்களிலும் 1998இல் பட்டம் பெற்ற வணிக, முகாமைத்துவ, கணக்கியல் பட்டதாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டத்திலுள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ள நிலையில், யாழ் மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடிய வழிகள் இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

15.07.2002இல் ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனத்தில், நிரந்தரப் பட்டதாரி நியமனத்தில் உள்ளவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இதனால் வேலையற்ற பட்டதாரிகள், வேலைவாய்ப்பு அற்று இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் எதுவித பயனுமில்லை.

15.07.2002இல் வழங்கப்பட்ட நியமனத்தை ஏற்காதவர்களின் நியமனங்களை இரத்துச் செய்து உடனடியாக பாடத்தைக் கருத்தில் கொள்ளாது பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

கடந்த சில வாரங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த
திரு.S.குணசீலன் ஆசிரியரின் **2003 A/L** உயிரியல் வகுப்பு
25.01.2003 சனி காலை 8.00 - 10.00 நடைபெறும்.

**NEW SCIENCE HALL JAFFNA.**

(13599)



# 15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

**காவேரி சில்க்ஸின்**

மா பெ ரு ம் ம லி வு வி ற் ப னை

**மாபெரும் மலிவு விற்பனை**

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

பாதிக்குப் பாதி விலைக்கழிவில்

எங்கும் வாங்க முடியாத விலையில்

- ★ சாறி வகைகள்
- ★ பிறிண்டட் மெற்றீரியல்
- ★ செக் மெற்றீரியல்
- ★ பிறிண்டட் சீத்தை
- ★ BOX சேர்ட்
- ★ சேட்டிங் சூட்டிங்

மற்றும்

அனைத்து ஜவுளி வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

# காவேரி

## மலிவு விற்பனை அகம்

77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-26193)


### மாணவி மர்ம மரணம்: பாடசாலை காவலாளி தொடர்ந்து விளக்கமறியலில்

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவியின் மர்மமரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில், பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட குறிப்பிட்ட பாடசாலைக் காவலாளியைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாடசாலைக் காவலாளியான தில்லையம்பலம் ரமணன்(வயது21) நேற்று மீண்டும் மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை அடுத்த மாதம் 5ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை -

மரபணுப்பரிசோதனை தொடர்பான அறிக்கையை மேற்குறிப்பிட்ட திகதி யில் மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.23

1992ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிப்பரீட்சை மூலம் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், ஆரம்ப கல்வி பயிலுநா ஆசிரியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத் திகதி மாற்றம் தொடர்பான மகஜரில் கையொப்பம் இடவேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்க வேண்டுமென பிரதிநிதிகள் கேட்டுள்ளனர்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

டிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், விக்ரம்,மகேஸ்வரி நடித்த

**உல்லாசம்**



நா.நே. - 11.00, 2.45, 6.00 (பு.நே.)

நாளை 24.01.2003 முதல்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**TOMB RAIDER** (C/26093)

**நாகம்ஸ்** சுன்னாகம்.



குணால், லோறன்ஸ், தாமு, வையாபுரி நடித்த

**அற்புதம்** (ரீலீஸ்)

தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நேரம்).


# யாழ். நீதிமன்றத்தில் கசிப்பு உற்பத்தி வழக்கில் 4 பேருக்கு ரூ.73 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.23

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கில், நால்வருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் 73 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த குணலிங்கம் சங்கர்,அராலி வீதி பொம்மை வெளியைச் சேர்ந்த போசஸ் தேவநாயகம் ஆகியோருக்கு தலா 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமும்-

மீனாட்சி அம்மன்வீதி கொட்டடியைச் சேர்ந்த கொன்ஸ்ரன்சேகரன் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும்-

இராசலிங்கம் ஜெகதீசன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை-அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வைத்திருந்தமைக்காக யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன் என்பவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-8)


**The Barbara Mulvaney**
**Computer Training Center**
*123, Temple Road, Jaffna*




கணனி மூலம் உங்கள் தட்டச்சு வினைத்திறனை சுயமதிப்பீடுசெய்து கொள்வதற்கான புதிய பயிற்சி நெறி இம் மாதம் 29ம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறிபற்றிய மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

எமது நிறுவனத்தில் கடந்த ஆண்டிற்கான பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் தங்களது சான்றிதழ்களை Feb 12ம் திகதிக்கு முன்பாக அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்

நிர்வாகம்


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சுப்பிரமணியம் *(ARTIST STR)*

'பாக்கியஸ்தான்', துரையன் தோட்டம், நவிண்டில், கரவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் (முன்னாள் பதில் அதிபர், யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி) 21.01.2003 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு (S.L.T.) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளன்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*நவிண்டில், கரவெட்டி.*
**T.P. No: 0777 - 162295**
கிருஷ்ணபிள்ளை தவச்செல்வம் (பெருமாள்)

குறிப்பு: நேற்றைய மரண அறிவித்தலில் கருணாகரன், ஸ்ரீஸ்குமார் என தவறாக பிரசுரிக்கப்பட்ட பெயர்களை கருணாநிதி, சிறிக்குமார் எனத் திருத்தி வாசித்துக்கொள்ளவும். (C/26194)

## லூஷன் யோசவ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லூஷன் யோசவ் கடந்த (18.01.2003) சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் லீலாவதியின் அன்புக்கணவரும் ஜெயந்தி, சுகந்தி, சாந்தி, அன்ரன், சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மோசஸ், அந்தோனிப்பிள்ளை, சுந்தரம் ஆகியோரின் மாமனாரும் அருட்செல்விகள் மாறி, புளோறன்ஸ் (திருக்குடும்ப கன்னியர்கள்), எல்மோ, அஞ்சலா ஆகியோரின் சகோதரனுமாவர்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருக்குடும்ப மாகாண இல்லம்,*
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(c-26198)

தகவல்:-
**அருட்செல்வி மாறி யோசவ்** (சகோதரி)

## சண்முகம் கதிரவேலு

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கதிரவேலு அவர்கள் நேற்று (22.01.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**அழகரத்தினம், விஜயபாஸ்கரன்** (மகன்மார்).

*344/7, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(13600)

## கார்த்திகேசு கந்தசாமி (கமிலஸ்)

*(ஓய்வுபெற்ற உபஅதிபர், யா/இமையாணன் அ.த.க.பாடசாலை)*

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி நேற்று (22.01.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லில்லிக்கிரேஸ் செல்வமணியின் அன்புக் கணவரும் செபநேசன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), செல்வரதி, ருகுணன் (யாழ்.பலகலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின அன்புத் தந்தையும் பெற்றில்டா ஸ்ரெலாஜினி அவர்களின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.01.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் கீரிப்பல்லி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*நெல்லியடி.*
(13601)

தகவல்:-
**எஸ்.யேசுநாயகம்** (மைத்துனர்)

### மீள்குடியமர்வை மதிப்பீடு செய்வதற்கு

# பிரதேச செயலக ரீதியாக ஏழு குழுக்கள் நேற்று தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான திட்டங்களைத் தயாரிக்க பிரதேச செயலக ரீதியாக ஏழு குழுக்கள் நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டன.

யாழ்.செயலகத்தில் நேற்றுக் காலை நடந்த மதிப்பீட்டுக்குழுவின் கூட்டத்தில் இந்த ஏழு குழுக்களும் தெரிவாகின. இக்குழுக்களில் அரசு, விடுதலைப் புலிகள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்றைய கூட்டத்தில் மதிப்பீட்டுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசுப் பிரதிநிதிகளும்,விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

'சிரான்' அமைப்பின் யாழ். மாவட்டத்துக்கான துணைக்குழுவின் புலிகள் தரப்பு உறுப்பினர்களான விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ்.மாவட்ட பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் மற்றும் கலைவிழி ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

நேற்றுத் தெரிவுசெய்யப்பட்ட குழுக்கள் இன்று முதல் தமது களப் பணிகளை ஆரம்பிக்கவிருக்கின்றன. இக்குழுவினர் நேரடியாக களத்தில் ஆய்வுகளை மேற்கொள்வர்.

மீளக்குடியமரும் மக்களுக்கு அடிப்படை வசதிகளான வதிவிடம் குடிதண்ணீர், மலசலகூட வசதி மற்றும் கல்வி வசதிகள் கிடைக்கும் வாய்ப்புக்கள் குறித்து இக்குழு ஆராய்ந்து இரு வாரங்களுக்குள் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏழு குழுக்களிலும் இடம்பெறும் உறுப்பினர்களின் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை**

ஏ.எஸ்.பெரேரா (அரசு), பி.கனகலிங்கம் (புலிகள்), ஜிபார்க் (ஐ.நா.).

**யாழ்ப்பாணம், நல்லூர்**

எஸ்.ஏ.சி.முபீன் (அரசு), வண.ஏ.எவ்.ஜெயசேகரம் (புலிகள்), ரபால் அபிஸ் (ஐ.நா.).

**சாவகச்சேரி**

கலாநிதி ஏ.எஸ்.குணசிங்கம் (அரசு), கே.அருந்தவபாலன் (புலிகள்), ஜோமக்விக் (ஐ.நா.).

**மருதங்கேணி, பருத்தித்துறை**

எம்.ஏ.ஜெயசேன (அரசு), எஸ்.பொன்னம்பலம் (புலிகள்),பிலிப்போறொசி (ஐ.நா.).

**கரவெட்டி, கோப்பாய்**

ஜே.சுபைன் (அரசு), ஏ.நீலகண்டன் (புலிகள்), லிண்டா (ஐ.நா.).

**உடுவில், தெல்லிப்பழை**

எஸ்சிவானந்தன் (அரசு), எஸ்பரமநாதன் (புலிகள்), பிரண்டன் பீஸ் (ஐ.நா.).

**சங்கானை, சண்டிலிப்பாய்**

கலாநிதி வி.அம்பலவாணர் (அரசு), எஸ்.சிறில் (புலிகள்), ஜெட்டி ஹைரம் (ஐ.நா.). மீள்குடியமர்வு மதிப்பீட்டுக் குழு அலுவலகம் யாழ்.செயலக மாநாட்டு அறையில் இயங்கவிருக்கின்றது. இந்த அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவரும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரியும் பணிபுரிவர்.

இந்த அலுவலகம் மூன்று மாதங்கள் செயற்படும்.

(ஐ-3-8)

---

## ஆளில்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலிலும் தரையிலும் விடுதலைப் புலிகளின் நகர்வுகள், நிலைகளைத் துல்லியமாகக் கண்டறியும் நோக்குடன் 90களின் பிற்பகுதியில் ஆளில்லா வேவு விமான அணி ஒன்றை இலங்கை அரசு கொள்வனவு செய்தது. இலங்கை விமானப் படையின் கீழ் இயங்கி வந்த இந்த விமானங்கள் இவ்வாறு அவ்வப்போது வீழ்ந்து நொறுங்கி வந்தன. அந்த வரிசையில் தற்போது கடைசி விமானத்தை விமானப்படை இழந்துள்ளது.

விமானப்படையின் ஆளில்லா வேவு விமானம் விபத்துக்குள்ளானது குறித்த விவரங்களை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

தொழில்நுட்பக் கோளாறே இவ் விபத்துக்கான காரணமாக இருக்கலாம் எனத் தோன்றினாலும், அதற்கான உண்மையான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தலைமைச் செயலகம் தெரிவித்திருக்கின்றது. வெங்காயத் தோட்டமொன்றிலேயே விமானம் வீழ்ந்துள்ளது.

இஸ்ரேலியத் தயாரிப்பான அந்த விமானம், 1996ஆம் ஆண்டு பெப்ரவரியில் விமானப் படையால் கொள்வனவு செய்யப்பட்டது. (ஐ-3-ம)

---

# ஆள்பலத்தைப் புலிகள் அதிகரித்துள்ளனராம்!

## ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.23

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த காலத்தில் தமது ஆள்பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இது ஒரு யுத்தநிறுத்த மீறல் ஆகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளின் படை எண்ணிக்கை 6ஆயிரத்திலிருந்து 16ஆயிரமாக அதிகரித்திருக்கின்றது.

அத்துடன் அவர்கள் நவீன கனரக ஆயுதங்களையும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். இது கடுமையான யுத்த நிறுத்த மீறலாகும்.

புலிகள் தமது படையில் சிறுவர்களையே அதிகமாக இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜனாதிபதியின் உளவுப்பிரிவின் அறிக்கை தெரிவிக்கின்றது.இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக்கூறியிருக்கின்றார்.

இந்த விடயங்கள் தொடர்பாக அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது புலிகளுடன் பேசி இவற்றுக்கு தீர்வு காணவேண்டும் எனவும் பிரதமரிடம் கேட்கப் பட்டுள்ளது- என்கிறார் ஹரீம் பீரிஸ். (ஐ-4)

---

## உலக வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி தொடர்பாகவும், யுத்தத்தினால் சேதமடைந்துள்ள குடிமனைகளைப் புனரமைப்பது குறித்தும் இந்தச் சந்திப்பில் இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

உங்களாலும் முடியும்!
Web உலகில்!!
தொடர் செய்முறைப் பயிற்சிகள்...
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
HTML, DIP.IN HARD WARE:
START ON: 25.01.2003
புதிய Soft Ware CDs
விற்பனையாகின்றன.
Audio, Vedio, MP3 CD
Writing செய்திட Rs.90 மட்டுமே!
D.Solve in I.B.M.S நிலவு.com
(43563) 701, K.K.S.Road, Jaffna.

## பொதுச்சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றின் விவரம் வருமாறு:-

தரவுப் பதிவு இயக்குநர் பதவிக்கு நாளையும், எழுதுவினைஞர் பதவிக்கு 27,28,29ஆம் திகதிகளிலும், தொழில்நுட்பவியலாளர், படவரைஞர் பதவிகளுக்கு 25ஆம் திகதியும், கணக்குப் பதிவுநர் பதவிக்கு 29ஆம் திகதியும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:--

யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், கிளிநொச்சி மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும், திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை, மன்னார், வவுனியா மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சிலும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்ட உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த முரண்பாடான நிலைமையைப் போக்குவது குறித்து புலிகள் இயக்கத் தலைவருடனான கண்காணிப்புக் குழுத் தலைவரின் சந்திப்பில் ஆராயப்படும் என்றும் ஹெலக்லண்ட் கூறியிருக்கிறார்.

இதனைவிட, போருக்கு, சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆள்கள் கடத்தப்படுதல், கப்பம் அறவிடப்படுதல் ஆகியன தொடர்பாக புலிகளுக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்தும் இச்சந்திப்பில் பேசப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் முன்னேற்றம், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் போர்நிறுத்த மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்தும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் புருஹேர்வ்டே புலிகளின் தலைவருடன் உரையாடுவார் எனவும் ஹெலக்லண்ட் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஐ)

அறிவொளி
நல்லூர்.
இணைந்த கணிதம்
B.ரவீந்திரன் B.Sc.
A/L 2002 Repeat.
★ நிகழ்தகவு ★
Fri. 3.30 - 6.00,
Sat., Sun. 10.15 - 12.15
A/L 2003
★ வட்டம் ★
Sat., Sun. 8.00 - 10.00
ஆரம்பம்: 25.01.2003
(13573)

---

### மீள்குடியமர்வோருக்கு

# ரூ.25 ஆயிரம் கொடுப்பனவு

## கொழும்பு கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

குடாநாட்டில் மீளக் குடியமரும் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் பிரதமரின் அபிவிருத்தித்துறை ஆலோசகர் எஸ்.பாஸ்கரலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

மீளக்குடியமர்வுக்கொடுப்பனவை 15 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது என்றும் -

இந்தக் கொடுப்பனவை பெறும் குடும்பங்களின் வருமான எல்லையை ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே 15 ஆயிரம் ரூபாவை கொடுப்பனவாகப் பெற்றவர்களுக்கு எஞ்சிய தொகை வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-3)

### தமிழக முகாம்களில் விவரம் சேகரிப்பு:

# ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் அகதிகள் தாயகம் திரும்புவர்

புதுடில்லி,ஜன.23

தமிழகத்தில் தங்கியிருக்கின்ற ஈழத்தமிழ் அகதிகளை அவர்களின் விருப்பத்துக்கு இணங்க எதிர்வரும் ஏப்பிரல் மாதத்துக்கு முன்னர் படிப்படியாகத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய அரசு முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழகத்தில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் ஈழத்தமிழ் அகதிகள் மற்றும் அவர்களில் தாயகம் திரும்புவதற்கு விரும்புபவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

தற்போது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதையடுத்து தமிழகத்திலுள்ள அகதிகளில் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளவர்களைப் படிப்படியாக இங்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பமாக இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-4)

---

## ரணில் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை வழங்கி வந்தது. இந்தக் குழுக்களின் கொலை அச்சுறுத்தல்கள் உயிர் ஆபத்துக்களுக்கு மத்தியில்தான் யாழ்ப்பாணத்தில் ஜனநாயகக் கட்சிகள் செயற்படவேண்டியிருந்தது. இப்போது இந்த அரசும் அந்தக் குழுக்களுக்கு பாதுகாப்பு, இரகசிய நிதிக் கணக்கின் கீழ் அதிக நிதியுதவி வழங்கிவருவது எனக்குத் தெரியவந்துள்ளது. இதன்படி, முன்னைய அரசின் காலத்தில் மாதாந்தம் 36 லட்சம் ரூபா பெற்று வந்த ஈ.பி.டி.பிக்கு இப்போது அத்தொகை மாதாந்தம் 70 லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ரெலோவுக்கு மாதாந்தம் 8 லட்சம் ரூபாவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்) அணிக்கு மாதாந்தம் 5 லட்சம் ரூபாவும் இதேபோன்று வழங்கப்படுகின்றது. இதேபோன்று புளொட்டும் இதுபோல கணிசமான தொகையைப் பெறுகின்றது.

இவ்வாறு சமூக விரோதக் குழுக்களை நிதியுதவி செய்து வளர்க்கும் அரசுடனும் பிரதமருடனும் இணைந்து செயலாற்றுவது எப்படி?

★ உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் மக்களின் அன்றாட - மனிதாபிமானப் பிரச்சினை தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் இந்த நியாயமான பிரச்சினையைத் தீர்த்து வைக்காமல் பிரதமர் ரணில் வேண்டுமென்றே இழுத்தடிக்கின்றார்.

★ நாட்டில 19 வீதத்தைக் கொண்ட தமிழர்களின் பிரதிநிதிகள் எவருக்கும் அமைச்சரவையில் பிரதமர் இடங்கொடுக்கவில்லை. பேச்சுப் பற்றி பேசும் பிரதமர், அதுபற்றி ஆராயக் கூடிய அமைச்சரவையில் இலங்கைத் தமிழர் எவரும் இல்லாத நிலையை விரும்புகிறார் போலும்.

★மேற்குப் பிரதேசம், தெற்கு பிரதேசம், வடமேற்குப் பிரதேசம், கிழக்குப் பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் வன்னிக்கு தனித்தனி அபிவிருத்தி அமைச்சுக்களை உருவாக்கி அந்தப் பிரதேச எம்.பிக்களிடம் அந்த அமைச்சர்களை ஒப்படைத்துள்ள பிரதமர், வடக்கு விடயத்தை மட்டும் அந்தப் பிரதேசத்தில் வசிக்காத ஒருவரிடம் ஒப்படைத்ததேன்? அந்த அமைச்சுக்கு வழங்கப்பட்ட 30 கோடி ரூபா அந்தப் பிரதேசத்தில் செலவு செய்யப்படவில்லை. அது எங்கு போயிற்று?

★ சமுர்த்தித் திட்டம் என்ற பேரில் ஆயிரத்து 250 கோடி ரூபாவை இந்த வருடத்தில் ஒதுக்கிய பிரதமர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக்கு இந்தப் பட்ஜெட்டில் குறைந்தது 200 கோடி ரூபாவையாவது ஒதுக்கியிருக்கலாம். ஏன் செய்யவில்லை?

★ கொடூரப் போரினால் பாதிக்கப்பட்டு அவல வாழ்வு வாழும் வடக்கு மக்களுக்கு பிரதமர் ரணிலின் 14 மாதகால ஆட்சியில் - யுத்தம் நிறுத்தப்பட்டதைத் தவிர - உருப்படியான வசதி வாய்ப்பு ஏதும் கிட்டவில்லை.

இந்தக் காலத்தில் வடக்கு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் தொடர்பாக பிரதமர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் 15 கூட்டங்கள் கூட்டப்பட்டன. அரசில் இடம்பெறும் வடபகுதியைச் சேர்ந்த ஒரேயொரு அமைச்சரான எனக்கு இந்தக் கூட்டங்கள் குறித்து தகவல்கள் கூடத் தெரிவிக்கப்படுவதில்லை.

★ பிரதமரின் ஆட்சியில் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நானும், நான் அதிதியாக வடக்குக்கு அழைத்துச் சென்ற எதிர்க்கட்சி எம்.பிக்களின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவும் வடக்கில் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. மக்கள் பாதிப்புக்குள்ளான பகுதிகளை நாங்கள் பார்க்க விடாமல் வடபகுதி கட்டளைத் தளபதி தடுத்துவிட்டார். இத்தகைய அரசில் இடம்பெற்று என்ன? இடம்பெறாமலிருந்தென்ன?

- இப்படி விசனத்துடன் வினவினார் அமைச்சர் மகேஸ்வரன். (ஐ)

அலுவலகப் பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்ற அலுவலகப் பணியாளர்கள் (Peons) தேவை. இன்று (23.01.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

உதயன் பத்திரிகை நிறுவனம்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/26191)

விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை

மஹாராஜா நிறுவனத்தின் துணை நிறுவனமான எஸ்-லோன் தனியார் நிறுவனம் பாடசாலைகளை விட்டுவிலகிய துடிப்பான, ஆர்வமுள்ள இளைஞர்களை விற்பனைப் பிரதிநிதிகளாக நியமிக்கவுள்ளது. இவர்கள் இந்நிறுவனத்தின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள விற்பனை மையங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர். விற்பனைப் பிரதிநிதிகளுக்கு ஆங்கில அறிவு அவசியமாகும். இதற்கான நேர்முகப்பரீட்சை இன்று (23.01.2003) காலை 11.00 மணிக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் நடைபெறும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/26190)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.